APR. 50

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை



கண்ணன்

தபால் பெட்டி : 604,
மயிலாப்பூர்,
சென்னை, 4.

வருஷ சந்தா
ரூ. 3/-

MADRAS

பொருளடக்கம்

மலர்: 1 இதழ்: 4

குழந்தைகளே! .. .. .. பக்கம் 2
தீராத விளையாட்டுப் பிள்ளை 3
ஜக்கு - 'ஆர்வி' 4
என்னைப்போலவே செய்யுங்கள் - பி. ஆர். ஆர். 9
எழுத்திலே மிருகங்கள் - படம் 12
மாயக் கம்பளம் கிடைத்தால் - படங்கள் .. 13
பவழவல்லி - கி. ரா. 17
குள்ள முயல் - 'ஜோதி மாமா' 23
சங்கீத கோஷ்டி - 'சோமசன்மா' 24
செவ்விந்தியச் சிறுவர் - ச. கு. கணபதி ஐயர் 30
கனவு பலித்தது - 'ஸேனு' 35
கிட்டுவின் தந்திரம் - தியாகராஜன் .. 39
ஜாஜாலியும் குதிரையும் - வாசு 40
மரப்பாச்சிக்குக் காய்ச்சல் - 'சூடாமணி' .. 46
கண்ணன் தபால் 48
தமிழ்த் தாத்தா - ா. ஜகந்நாதன் .. 51
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 57
கோலி விளையாட்டு - 'சுண்டு' 59
கிளி - தி. ஜ. ர. 60

கதைகளில் வரும்

குழந்தைகளே!

அப்பா! என் கை எப்படி வலியெடுத்துப் போய் விட்டது! ஆனால் மனசுக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறது! தினந்தோறும் குழந்தைகள் நூற்றுக்கணக்கான கடிதங்கள் எழுதுகிறார்கள். அவைகளைப் பிரித்துப் பார்ப்பதில்தான் கைவலி எடுக்கிறது. அந்த வலியைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறேன். அத்தனை கடிதங்களும் படிக்கப் படிக்க எவ்வளவோ சுவாரஸ்யமாக இருக்கின்றன. "அது போடுங்கள்; இது போடுங்கள்" என்று பல குழந்தைகள் யோசனை சொல்கிறார்கள். "நான் அது எழுதலாமா, இது எழுதலாமா?" என்று பலர் கேள்வி கேட்கிறார்கள். எது வேண்டுமானாலும் எழுதுங்கள். படித்துப் பார்க்கிறேன். 'கண்ணன்' நன்றாக வரவேண்டும் என்ற ஆசை எல்லோருக்கும் இருக்கிறது. ஆகையால் நல்ல நல்ல விஷயங்களாகப் போட வேண்டுமல்லவா? நீங்கள் அனுப்புகிற கதையோ, கணக்கோ, கட்டுரையோ எதுவானாலும் நல்லதாய், மற்றக் குழந்தைகள் 'சபாஷ்' என்று சொல்லக்கூடியதாய் இருந்தால் நிச்சயம் 'கண்ணனி'ல் போடுவேன். சில குழந்[illegible]கள் வேடிக்கை வேடிக்[illegible]கக் கடிதம் எழுதுகிறார்கள்.

இந்தக் கடிதங்களையெ[illegible]லாம் படிக்கும்போது எனக்கு ரொம்ப ரொம்ப உற்சாகம் உண்டாகிறது. மேலும் மேலும் நல்ல ருசியான கதைகளை வெளியிட வேண்டுமென்று தோன்றுகிறது. அடுத்து வரும் இதழ்களில் பல பல புதிய விஷயங்களை வெளியிட ஏற்பாடு செய்துகொண் டிருக்கிறேன்.

ஜனவரி மாதம் 26-ஆம் தேதி 'கண்ணன்' தோன்றினான். ஒவ்வொரு மாதமும் முதல் தேதியே கொண்டுவர வேண்டுமென்று நினைக்கிறேன். அடுத்த மாதத்திலிருந்து அப்படியே வரும்.

போன மாதம் ரெயில் பரிசு வாங்கின சிரஞ்சீவி பாலசுப்பிரமணியன் சந்தோஷப்பட்டு ஒரு கடிதம் எழுதி யிருக்கிறான். அவன் படமும் கடிதமும் இந்த இதழில் இருக்கின்றன. அடுத்த ப்டி யாருக்குப் பரிசு கிடைக்கிறதோ! அப்படிக் கிடைக்கும்போது அந்தப் பையன் படத்தையுந்தான் நீங்கள் பார்க்கப் போகிறீர்களே! தப்பு, தப்பு. பையன் என்றா சொன்னேன்? பெண் குழந்தைகளுக்குக் கோபம் வரப்போகிறது! ஒரு பெண் குழந்தை பரிசு வாங்கலாமே! வாங்கினால் இரட்டிப்புச் சந்தோஷம்.

கண்ணன் கழகம் வளர்ந்து கொண்டு வருகிறது. வெகு வேகமாக அங்கத்தினர் சேர்ந்து வருகிறார்கள். சேரும் வேகத்தில் அவர்களின் பெயர்களை வெளியிடுவதானால், கண்ணன் பத்திரிகை முழுவதும் போதாது! கண்ணன் கழக அன்பர்களுக்குப் பதக்கம் (பாட்ஜ்) தயாராகிக் கொண்டிருக்கிறது. பலே ஜோராக இருக்கும். நான் சொல்வானேன்? நீங்களே பார்க்கப் போகிறீர்களே!

—ஆசிரியர்

மிருந்து நீ தப்ப [illegible]யாது. எதற்கும் ஜாக்கிரதை!"

"நான் தூங்கி எழுந்தபோது என் தலைமாட்டில் இருந்தது இது" என்றான் ஜக்கு. நந்துவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

அன்றைக்குப் பொது விடுமுறை நாள். மணி பதினொன்று இருக்கும். மரீனா பீச்சில் உள்ள 'ஸ்விம்மிங் பூல்' திமிலோகப் பட்டது. பையன்களுடைய அட்டகாசம் தாங்க முடியவில்லை. அதோ, மேல் கட்டையிலிருந்து கர்ணம் போட்டுக் குதிப்பது யார்? ஜக்குவா? இதோ அதைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது? ஆமாம்; நந்துதான்.

"அடே ஜக்கு, இங்கே



வாயேன்... இங்கே வாயேன்!" என்று கரையில் இருந்தபடியே அலறினான் நந்து.

இப்படி ஒரு கைமாற்று, அப்படி ஒரு கைமாற்று. ஜக்கு கரையேறி வந்தான்

"இந்தப் பசங்களெல்லாம் உன்னை ஒரு மாதிரியாப் பாக்க றாண்டா ஜக்கு. அதோ, நீல நிக்கரும், பூனைக் கண்ணும் செம்பட்டைத் தலையுமாய், 'அந்தர்' அடிக்கிறானே, அவன் தாண்டா 'உல்ப்'. அவன் உன்னோடே போட்டிப் போடப் போறானும்" என்றான் நந்து.

"வரட்டும்டா பார்த்துக் கிறேன்" என்று சொல்லிவிட்டு ஜக்கு ஓடிப்போய், கட்டையி லிருந்து, "கரணம் போடுறு ராஜா - போடு கரணம்" என்று சொல்லிக்கொண்டே கும் மென்று குதித்தான்.

கரையோரமாய் விளிம்பைப் பிடித்துக் கொண்டிருந்த பையன்கள் 'ஹோ' என்று கூச்சல் போட்டார்கள். "டேய், தஞ்சாவூர்ச் சிங்கம் கரணம் போடறதைப் பாருங்கடோய்! பிச்சைக்காரக் குறவன் இழுத்துண்டு வர குரங்குக்குட்டி கர்ணம் அடிக்கிறது போல!" என்று கேலி செய்தார்கள்.

உல்ப் அடித் தொண்டையுடன் வீல் என்று கத்தினான். "(அ) சிங்கம் எங்கேடா, காணோம்?"

நோஞ்சல் எலியைப்போலிருந்த ஒரு பையன், "முழுகியேபோப்போறான் போலிருக்கடா, பட்டிக்காட்டுச் சிங்கம்" என்று உயிரைப் பிடித்துக் கொண்டு கத்தினான். விலா எலும்பெல்லாம் விம்மிப் புடைத்துக்கொண்டது.

"அடேடே, உசிரை விடடாதேடா பாவி! நீ கத்தறதைப் பார்த்தா மேலே போற மூச்சு கீழே வராமலே போய் விடும்போலிருக்கேடா" என்றான் நந்து துறை ஓரமாய் வந்து. அவனுக்கு மூழ்கிய ஜக்கு வெளிப்படாமல் இருக்கிற ஆத்திரம். பையன்களுடைய கேலியைத் தாங்க முடியாத ரோசம். 'உல்ப்' கோஷ்டியிடம் சகிக்க முடியாத வெறுப்பு. அந்த ஆத்திரத்துடன் காலை உதைத்துக்கொண்டான்.

"தஞ்சாவூரிலே 'ஸ்விம்மிங் பூலை'ப் பார்த்திருந்தாத்தானே?" என்று கதறினான் சோனி.

"அடே, எனக்குத் தெரியும்டா கபாலி; அங்கே எருமை குளிப்பாட்டற குட்டை இருக்குடா" என்றான் உல்ப். ஒரே கைதட்டல், விசில், ஆரவாரம். நந்துவுக்கு வந்த வேகத்தில் தண்ணீரில் குதித்து இந்தப் பையன்களை ஒரே அறை யாக அறைய வேண்டும்போல இருந்தது. ஆனால் அவனுக்குத் தண்ணீரில் இறங்கியே பழக்கமில்லையே!

"டேய், டேய்..." என்று பயங்கரமாய் அலறினான் உல்ப். கபாலி உடனே பெரிய பலசாலியைப்போல அவன் கையைப் பிடித்துக் கொண்டான். ஆனால் முதலை பிடித்து இழுப்பதுபோல, தண்ணீருக்குள் தன் காலை யாரோ வாரி இழுப்பதை உணர்ந்தான் உல்ப். அவன் 'தத்தக்கா பித்தக்கா' என்று தத்தளித்துக்கொண்டே

நடுத்தண்ணீருக்கு இழுத்துப் போகப்பட்டான். கபாலியும் அவனுடன் கதறிக்கொண்டே தடுமாறினான். நந்து ஆரவாரம் செய்தான். மூச்சுத் திணறுகிற சமயத்தில்தான் 'உல்பை'ப் பிடித்திருந்த பிடி நழுவியது எல்லாம் இரண்டு மூன்று நிமிஷங்கள்தான். ஜக்துவை எல்லாரும் எதிர்க்கரையில் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், கட்டைமேல் பாட்டுச் சத்தம் கேட்டது:

"ஓநாயின் ஊளையைக் கேட்டீங்களோ, கேட்டீங்களோ... ...ஓ...ஓ..." என்று பலீன் சடுகுடு ஆடுவதுபோல ஜக்கு பாடிக் கொண்டே தண்ணீரில் குதித்தான்.

உல்ப திணறிக்கொண்டே கரைக்கு நீந்தி வருவதும் ஜக்கு குதிப்பதும் ஒன்றாய் இருந்தன. 'பொதக்கடீர்' என்று உல்பின்மேல் குதித்தான் ஜக்கு. உல்ப் எப்படியோ சமாளித்துக் கொண்டான். பூனைக்கண் புலிக்கண்போல உருட்டி விழித்தது. சீறிப் பாய்ந்தான், முழு வேகத்துடன். ஜக்கு வெளிப்பட்டதும் அவன் தலைமயிரைப் பிடித்துக்கொண்டான். "எலே, பட்டிக்காட்டுப் பையா? உடம்பு 'நமு நமு'ன்னு ஊறுதோ?" என்று சொல்லிக்கொண்டே தண்ணீருக்குள் ஓர் அழுத்து அழுத்தினான். சோனிக் கபாலி இன்னும் கரைக்கு வந்து சேரவில்லை. மற்றப் பையன்கள் மட்டும் கரகோஷம் செய்தனர். உல்ப்பின் கோபம் அவர்களுக்கு ஓர் ஒப்பற்ற காட்சி!

நந்து கரையிலிருந்தபடியே காற்றில் கையை உதறிக்கொண்டிருந்தான். ஆனால் என்ன செய்வது? ஜக்கு மேலே வருவதும் 'உல்ப்' அவனை மறுபடி கீழே அமுக்குவதும் இரண்டு மூன்று தடவை ஆயின.

"காமரா இருந்தால் போட்டோப் பிடிங்கடா! கப்பல்லே போட்டோ போட்டாப்பலே இதையும் போடட்டும்" என்று உறுமினான் உல்ப்.

ஒரே விநாடிதான். அடுத்த கணம் உல்ப் வாயைப் பிளந்து ஊளையிட்டான். தண்ணீருக்குள்ளிருந்தபடியே அவன் காலைப் பிடித்து ஒரே வாராக வாரியெடுத்துக் கவிழ்த்துவிட்டான் ஜக்கு. "அடே உன் ஜோலிக்கு இனி வரல்லே, வரல்லே" என்று கதறினான் உல்ப்.

சோனி கரைக்கு வர முடியாமல் தவித்துக்கொண்டிருந்ததைக் கண்ட ஜக்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவனை இழுத்துக் கரையில் தள்ளினான். "மிஸ்டர் சோனி! குரங்குக் குட்டியைப் பார்த்தியா? அந்தக் குரங்கு கர்ணமும் போடும். உன் உயிரையும் காப்பாத்தும், தெரியுமா?" என்றான் ஜக்கு.

"யாரப்பா இங்கே ஜக்கு?" என்று கேட்டுக்கொண்டே காவற்காரன் வந்தான்.

"ஏன்?" என்றான் ஜக்கு.

"போன் வந்திருக்குது."

ஜக்குவும் நந்துவும் அதற்குமேல் அங்கே ஏன் நிற்கிறார்கள்? போன் மூலம் யார் பேசுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாதா?

மத்தியான்னம் ஜக்கு காமிரா

அறையில் படுத்துக்கொண்டிருந்தபோது வெளியில் பேச்சுக் குரல் கேட்டது. எழுந்து வந்து பார்த்தான். அப்போது உல்பும் சோனிக் கபாலியும் அவன் வீட்டினுள்ளிருந்து வெளியே போய்க் கொண்டிருந்தார்கள்.

சற்றுப் பொறுத்து அவன் எதிர்பார்த்தபடியே மாமி வந்து அவனை மாமா அழைப்பதாகக் கூப்பிட்டாள். ஜக்கு நேராக மாடிக்குப் போனான். அங்கே மேஜையைக் கவனித்தான். 'சொரக்' என்றது. அவன் ஊருக்குக் கொண்டு போக வாங்கி வந்திருந்த 'கண்ணை மூடித்திறக்கும்' செலுலாய்டு பொம்மையைக் காணவில்லை. அதை மூடியிருந்த காகிதம் மட்டும் கீழே கசங்கிக் கிடந்தது.

"பொம்மை எங்கே?"

"எது பொம்மை?" என்றார் மாமா.

"நானும் பார்க்கவில்லையே" என்றாள் மாமி.

"இங்கே இரண்டு பையன்கள் வந்தார்களே?" என்று கேட்டான் ஜக்கு.

"ஒருவரும் வரவில்லையே?" என்றாள் மாமி.

"நான் அவர்கள் வெளியில் போனதைப் பார்த்தேனே!"

"எங்களுக்குத் தெரியாது."

ஜக்கு விக்கிப்போய் நின்றான். மாமா அவனிடம், "உன்னை எதற்குக் கூப்பிட்டேன், தெரியுமா?" என்றார்.

"எனக்குத் தெரியாது. ஆனால் நான் இன்னிக்கு ராத்திரியே ஊருக்குப் போகப் போறேன்" என்றான் ஜக்கு முந்திக்கொண்டு.

"அப்படியா?" என்றாள் மாமி.

"ஆமாம், நான் முடிவு செய்து விட்டேன். இனிக் கோடை லீவின்போதுதான் திரும்பி வருவேன்" என்றான் ஜக்கு.

அதற்கு ஒருவரும் பதில் சொல்லவில்லை.

மாமியும் ஜக்குவும் வீட்டில் ஓர் இடம் பாக்கியில்லாமல் பொம்மையைத் தேடினார்கள். பொம்மையைக் காணவே காணோம். யார் இவ்வளவு தைரியமாய் எடுத்துப் போயிருப்பார்கள்?

இதை நந்துவிடம் சொல்வதற்கு ஜக்கு வெளியில் போனான். மாமி தேடி அலுத்துப் போய் மாடிக்குப் போனாள். ஜக்கு திரும்பி வந்ததும் அவன் படுக்கையில் ஒரு கடிதம் செருகி வைத்திருந்தது.

"அடேய் ஜக்கு, பொம்மையைத் தேடாதே. என்னிடம் தான் இருக்கிறது பொம்மை. இன்று இரவு ஊருக்குப் போகப் போவதாகத் தெரிகிறது. எங்கே பார்க்கலாம்" என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது. 'பின்குறிப்பு' என்று அடியில் ஒரு வாக்கியம் காணப்பட்டது. அதில், "இன்றைக்கு ஸ்விம்மிங் பூலில் நடந்தது எனக்குத் தெரியும்" என்றுதான் எழுதியிருந்தது.

"ஊருக்குப் போகப் போவதாகத்தான் இருந்தேன். ஆனால் இது யாரென்று கண்டுபிடிக்காமல் போகப்போவதில்லை" என்றான் ஜக்கு.

என்னைப் போலவே செய்யுங்கள்

பி. ஆர். ஆர்.

உலகமெங்கும் புகழ்பெற்ற ஒரு சாமியார் தம்முடைய சீடர்கள் வாழும் ஊர்களை எல்லாம் பார்த்து வரப் புறப்பட்டார். அவர் போனபோது, அவரோடு யானைகள், ஒட்டகங்கள், குதிரைகள் முதலான பரிவாரங்களெல்லாம் புறப்பட்டன. அவர் வருகிறார் என்று கேட்டவுடனே அவருடைய சீடர்கள் இருக்கும் ஊர்களில் விசேஷமான தோரணங்கள் கட்டித் தொங்கவிட்டு அலங்காரம் எல்லாம் பண்ணியிருக்கும். ஒவ்வோர் ஊரிலும், ஊருக்குப் பெரிய மனிதர் வந்து மடாதிபதியை வரவேற்று உபசரிப்பார்கள்.

அந்த மடாதிபதி ஓர் ஊருக்குப் போக நேர்ந்தது. அவர் வருகையைக் கேட்டதும், ஊரெங்கும் குருத்தோலை, மாவிலை எல்லாம் கட்டித் தொங்கவிட்டு அலங்காரம் பண்ணினார்கள். கோவில் கோபுரங்களில் கொடிகள் கட்டிப் பறந்தன. கிராமாதிகாரி ஊர் ஜனங்களைக் கோயில் முன்னே இருக்கும் மண்டபத்தில் கூட்டி மடாதிபதியை வரவேற்க என்ன என்ன எல்லாம் செய்யவேண்டும் என்று யோசித்தார்.

பசு வெண்ணெய்க்கும் கொய்யாப் பழத்துக்கும் அவர்களுடைய ஊர் பேர் போனது. அதனால் நூறு பணக்காரர்கள் வெள்ளித் தட்டுகளிலே வெண்ணெயும் கொய்யாப் பழமும் காணிக்கையாகக் கொண்டு போகவேண்டும்" என்று ஏற்பாடு செய்தார்.

பின்பு மடாதிபதியைக் கோயிலின் கல்யாண மண்டபத்தில் வந்து தங்கும்படி செய்ய வேண்டும் என்றும் ஏற்பாடாயிற்று.

கடைசியாக வரவேற்பு வைபவங்களைப் பற்றிப் பேசி முடிக்கும்போது, கிராமாதிகாரி, "ஊர் மகாஜனங்களே! வரப்போகிறவர் நமது மடாதிபதி. அவர் முன்னால் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது எல்லாருக்கும் தெரியாது. அதனால், எல்லாரும் என்னையே கவனிக்கவேண்டும். நான் செய்கிறபடியெல்லாம் நீங்களும் செய்யத் தவறலாகாது. இதை ஒருவரும் மறக்க வேண்டாம்!" என்றார்.

குறித்திருந்த நாளில் மடாதிபதி வந்தார். கோயில் கல்யாண மண்டபத்தில் அவருக்காகப் போட்டிருந்த தங்கப் பீடத்தில் வந்து அவர் உட்கார்ந்தார். கல்யாண மண்டபம் முழு

வதும் விளக்குகள் ஏற்றிப் பிரகாசமாக இருந்தது. அந்தச் சமயத்தில் ஊர் ஜனங்கள் எல்லோரும் மேள வாத்தியங்கள் முழங்க ஊர்வலம் வந்தார்கள். இரண்டு பக்கங்களிலும் வரிசையாகப் பெண்கள் குத்துவிளக்குகளையும் பூர்ண கும்பங்களையும் எடுத்து வந்தார்கள்.

இந்த வரிசைக்கு நடுவில் கிராமாதிகாரி பட்டுக்கரை வேஷ்டி கட்டிக்கொண்டு சரிகைத் துப்பட்டாவை இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு தொந்தி வயிறு முன்னே விழ ஆடி ஆடி நடந்து போனார். அவருடைய இடது கையில் ஒரு வெள்ளித் தட்டில் வெண்ணெய் இருந்தது. வலது கையில் கொய்யப்பழத் தட்டு இருந்தது. தட்டுக்கள் இரண்டையும் அசையாமல் ஏந்தி அசைந்தசைந்து போகவே, அவருக்குப் பின்னால் 99 பேர் அவரைப் போலவே பட்டுக் கரை வேஷ்டி கட்டி, சரிகைத் துப்பட்டாக்கள் அணிந்து, தட்டுகளில் வெண்ணெயும் கொய்யாப் பழமும் ஏந்திக்கொண்டு போனார்கள். கல்யாண மண்டபத்தின் கிட்ட வந்தபோது, பின்னால் வருகிறவர்களைத் திரும்பிப் பார்த்து, கிராமாதிகாரி, "மறந்து விடாதேயுங்கள். நான் செய்கிற மாதிரியே செய்யுங்கள்" என்று சொல்லிக்கொண்டே முன்னே காலெடுத்து வைத்தார். கல்யாண மண்டபத்திற்கு நுழையும் முன் ஒரு படி இருந்தது. அதைத் தாண்டி தான் உள்ளே போகவேண்டும். பேசிக்கொண்டு வந்ததில் கிராமாதிகாரி அதைக் கவனிக்கவில்லை. அதனால், "எல்லாரும் என்னைப் போலவே செய்யவேண்டும்" என்று சொல்லிவிட்டு, முன்னே காலெடுத்து வைக்கவே, கால் தடுக்கிக் கீழே குப்புற விழுந்தார். விழுந்த போது கையில் இருந்த வெண்ணெய் அவருடைய முகம் முழுவதிலும் அப்பிக்கொண்டது. அவருடைய கண் மீசை தாடி முகம் எல்லாம் ஒரே வெண்ணெய்ப் பூச்சாகிவிட்டது. கையிலிருந்த தட்டும் கீழே விழுந்துவிட்டது. கொய்யாப்பழங்கள் எல்லாம் மூலைக்கு ஒன்றாக உருண்டன. இந்தச் சங்கடமான நிலைமையிலிருந்து சமாளித்துக்கொள்வதற்காக முழங்காலில் நின்றுகொண்டு மடாதிபதி இருந்த பக்கமாக வெண்ணெய் மெழுகின முகத்தைத் தூக்கினார். அப்போது பின்னால் வந்தவர்கள் எல்லாரும் மடாதிபதிக்கு இப்படித்தான் மரியாதை பண்ணவேண்டுமென்று நினைத்துக்கொண்டு, தாங்களும் தங்கள் கையில் இருந்த வெண்ணெய்த் தட்டிலே தங்கள் முகங்களை ஒரு முறை தோய்த்தார்கள். தட்டுடன் கொய்யாப்பழங்களையும் உருட்டித் தள்ளினார்கள். எல்

லாரும் ஒருவர்பின் ஒருவராகத் தங்கள் வெண்ணெய் முகங் களை மடாதிபதிக்கு முன்னே காட்டி முழங்கால் படியிட்டு நின்ருர்கள். அதே சமயத்தில், "நாங்கள் எல்லாரும் நீங்கள் செய்தபடியே செய்திருக்கிரே மல்லவா?" என்று கேட்கிற பாவனையாகக் கிராமாதி காரியைப் பார்த்தார்கள். மடாதிபதிக்கு விஷயம் விளங்கிவிட்டது. அவர் குலுங் கக் குலுங்கச் சிரிக்கத் தொடங் கிஞர். ஆனல் மடாதிபதியோடு வந்தவர்கள் தங்கள் குருவை அந்த ஊரார் அவமதித்ததாக நினைத்துக் கீழே உருண்டு ஓடின கொய்யாப்பழங்களை எடுத்துப் பவனி வந்த ஊர் ஜனங்கள் மேல் எறியத் தொடங்கினர்கள். கிராமாதி காரியும் அவரோடு வந்தவர் களும் தப்பிக் கல்யாண மண்ட பத்தை விட்டு வெளியே வந்தார்கள். "நல்ல காலம், நாம் கொய்யாப் பழங்களை மட்டும் கொண்டு வந்தோமே. தேங் காய்களைக் கொண்டு வந்திருந் தால், நம்முடைய பாடு என்ன வாயிருந்திருக்கும்?" என்று சொன்னர் கிராமாதிகாரி. எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.



எழுத்திலே படங்கள்



1. குதிரை 2. முதலை 3. நாய்
4. கழுதை 5. யானை 6. பெண்

மாயக்கம்பளம் கிடைத்தால்

"உங்களுக்கு ஒரு மாயக் கம்பளம் கிடைத்தால் எங்கெல்லாம் போவீர்கள்?" என்று கேட்டதற்கு இதோ எட்டுக் குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியபடியே இங்கே பிரசுரித்திருக்கிறோம்.



கே. சுப்பிரமணியன், 10 வயது



ஜி. சுப்பிரமணியன், வயது 13.

எனக்கு ஒரு மந்திரக் கம்பளம் கிடைத்தால், நான் முதலில் என் சொந்த ஊரான திருச்சூருக்கு என் தாய் தந்தையார் தம்பி, அண்ணா இவர்களையும் அழைத்துக்கொண்டு பறந்து செல்வேன் என் உறவினர்களையும் பார்த்துவிட்டு அவர்களையும் ஏற்றிக்கொண்டு உலகத்தை சுற்றி பார்ப்போம் உலகத்தில் பிராணிகளையும் மனிதர்களையும், ஜீவிகளையும் ஹிம்ஸிப்போரிடம் சென்று மரியாதையுடன் அப்படி செய்யக் கூடாது, அது பிழை என்று சொல்லி அவர்கள் மனதில் பதிய வைப்போம் இன்னும் இருக்கும் அதிக துன்பங்களை நீக்குவோம்,

எனக்கு மாயக் கம்பளம் கிடைத்தால் நான் அமெரிக்காவில் உள்ள ட்ரூமன் வீட்டிற்குப் போவேன். அவர் வீட்டிற்குப் போய் அவருடன் பேசுவேன். கடைசீயில் நேருஜியிடம் ட்ரூமனை அழைத்து போவேன். நாம் மூவரும் டின்னர் சாப்பிடுவேம்.

வி. ராமமூர்த்தி, 10 வயது.



டி. ஹர்ஹரபுத்திரன், 10 வயது.

எனக்கொரு மாயக் கம்பளம் கிடைத்தால், நான் முதலில் ஆக்ராவிற்குச் சென்று தாஜ் மஹாலைப் பார்த்துவிட்டு, அங்கிருந்து டெல்லிக்குச் செல்வேன். அங்கு மொகலாய அரசர் ஷாஜஹான் கட்டிய பல கட்டிடங்களையும், லெஜில்ஸ்லேடிவ் அசெம்பிளி கட்டிடத்தையும் பார்த்துக் களித்து அங்கிருந்து தஞ்சாவூருக்குச் சென்று பிரகதீசுவரர் ஆலயத்தையும், அங்கிருந்து மதுரைக்குச் சென்று திருமலை நாயக்கர் மஹாலையும் பார்ப்பேன். பிறகு அமெரிக்காவிற்குச் சென்று நயாகரா நீர் வீழ்ச்சி, நியூ யார்க்கிலுள்ள பல கட்டடங்களையும் பார்த்துவிட்டு, இங்கிலாந்துக்குச் சென்று அதையும் சுற்றிப் பார்த்துவிட்டு, பிறகு இந்தியாவிற்கு வந்து கண்ணன் காரியாலயத்திற்குச் சென்று ஒரு கண்ணன் பத்திரிகையையும் வாங்கிக்கொண்டு வீடு வந்து சேருவேன்.

எனக்கு ஒரு மந்திரக் கம்பளம் கிடைத்தால் நான் என்ன செய்வேன் தெரியுமா? கேளுங்கள் சொல்லுகிறேன். உலகம் புகழும் ஸ்ரீமான் பகவான் ரமணமஹரிஷியைப் போய்ப் பார்ப்பான். அவரை தரிசிப்பேன். அவரிடம் கடவுளை அடையும் வழியை (மோக்ஷத்தை) கேட்டுத் தெரிந்துகொள்வேன். அங்கிருந்துக் கோவிலுக்குச் செல்வேன். கடவுளைத் தரிசிப்பேன். பிறகு பகவான் ரமண மஹரிஷியிடம் பிரியா விடைப்பெற்றுக் கொண்டு சிதம்பரம் சென்று கடவுளை தரிசனம் செய்து பாரீஸ் நகரத்துக்குச் சென்று அங்குச் ஸெண்டுகள் செய்யும் தொழிர்ச் சாலைச் சென்று அவற்றைப் பார்ப்பேன். அங்கிருந்து எகிப்துக்கு கிளம்பி அவ்விடம் உள்ள பிரமிட்டுகளைப் பார்ப்பேன். லண்டனுக்குச் சென்று பார்லிமெண்டு கட்டிடத்தைப் பார்ப்பேன்.

ஏ. கோவிந்தராஜன், 10 வயது.

நான் இந்த மாயக் கம்பளத்தில் ஒரு நல்ல ஊருக்கு அதாவது மாயவரம், கும்பகோணம் தஞ்சாஊர் இந்த இடத்திற்கு போவேன். பிறகு நான் மைசூர், லண்டன், பாரீஸ் முதலிய இடங்களுக்கு போவே அதை நான் ஒரு பூகம்பம் ஏற்பட்டால் அதில் இறங்கி கீழே என்ன இருக்கிறது என்று பார்போன். அங்கு ரத்தினம், தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களைப் பார்தேன் மாயவரத்திற்குப்போய், அங்குள்ளவைகளை பார்பேன். கும்பகோணத்தில் பாத்திறக் கடையையும், பார்பேன், தஞ்சாஊரில் ப்ரகதீஸ்வரர் கோவிலையும் அங்குள்ள நந்தியையும் பிறகு இரதம் பல்லக்கு முதலிய பற்பல பொருள்களையும் பார்போன். மைசூர், லண்டன் பாரீஸ் முதலிய இடங்களில் அங்குள்ள பெரிய தொழிற்சாலைகளையும் பார்பேன். எனென்றால் அவைகள் என்னுடைய பாட சம்பந்தமானவைகள் வரும்



பி. சணபதி, 10 வயது

எனக்கு ஒரு மந்திர கம்பளம் கிடைத்தால் நான் கல்கத்தாவுக்குச் சென்று வருவேன். அமெரிக்காவுக்குச் சென்று அங்கு அணுகுண்டு செய்வதையும் இப்பொழுது புதிதாக செய்யப்பட்ட குண்டு செய்வதையும் பார்ப்பேன் பிறகு அங்கிருக்கும் வானளாவிய கட்டிடங்களையும் பார்ப்பேன். பிறகு உலகில் உள்ள அதிசயங்களை பார்ப்பேன் பர்மாவுக்குச் சென்று தேக்கு மரம் வெட்டுவதையும் ஊசியிலை காடுகளுக்குச் சென்று அதை வெட்டுவதையும் நெருப்புக்குச்சி செய்வதையும் பார்ப்பேன். தாஜ் மஹால் முதலியவற்றையும் பார்ப்பேன் பிறகு உலகில் நடக்கும் கிரிகெட் டெஸ்டுமாட்சுகளையும் ஹாக்கியையும் டென்னீஸ் மாட்சுகளையும் பார்ப்பேன் ஆகாய விமானத்தில் பறப்பதுபோல் பறப்பேன் மேகங்களை பார்ப்பேன் கீழே இறங்காமல் மேலேயே சுற்றிக்கொண்டிருப்பேன்.



ஜி. பாலசுப்பிரமணியன், 10 வயது.



வி. மணி, வயது 10

மாயக் கம்பளத்தில் நேராக ஏறிக்கொண்டு ஒவ்வொரு கிராமத்திற்குப் போய் ஏழைகளுக்கு படிப்பும் அன்னமும் முதலியவைகளைத் தருவேன். செல்வம் இருந்தால் ஏழைகளுக்கு தானம் செய்வேன். இந்தியாவில் நிறையாக கிராமங்கள் இருப்பதால் ஆங்காங்கே சென்று உழவர்களையும், கைத்தொழிலாளர்களையும், சிறு தொழிலாளர்களையும் வேலை செய்ய தூண்டி விடுவேன். பிறகு நம் இந்தியாவில் உள்ள நகரத்திற்கு எல்லாம் போய் நகரமக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்றும், அங்கு உள்ள சர்க்கார் எப்படி நடத்துகிறார்கள் என்றும் போக்வரவு சாதனங்களைப் பார்த்தும், நகரத்தை சுற்றியும் அங்குள்ள பத்திரிக்கைகளையும், படிப்பேன். பிறகு அங்குள்ள பாஷைகளைக் கற்றும் பிறகு அயல் நாட்டு மக்களின் பற்றிவன் அறிந்து கொண்டும் திரும்பி மாயக் கம்பளத்தில் திரும்பி வருவேன்.

எனக்கு ஒரு மாயக் கம்பளம் கிடைத்தால் நான் அமெரிக்கா, லண்டன், ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்குச் செல்ல நினைப்பேன். நான் பள்ளிக்கூடத்துக்கு நினைத்த மாத்திரத்தில் வந்து விடுவேன். நான் பரீட்கைஷ லீவுக்கு ஒவ்வெரு நாளுக்கு ஒவ்வொரு ஊருக்குச் செல்வேன். நான் ஸ்டாலினைப் பார்த்து ஷேகண் கொடுப்பேன். ஜவஹர் ராஜேந்திர பிரசாத் முதலியவர்களைப் பார்ப்பேன். நான் லண்டனுக்குச் சென்று வெகு நன்றாக ஆங்கிலம் கற்றுக்கொண்டு வருவேன். நான் ஹோட்டலுக்கு ஒருவருக்கும் தெரியமல் உள்ளே போய்விடுவேன். டிக்கட் கொடுப்பவருக்குத் தெரியாமல் கண்காட்க்ஷி, மிருகக் காட்க்ஷிச் சலை முதலியவைகளுக் செல்வேன். நான் வெளிநாடுகளுக்குச் சென்று பெரிய பெரிய பிரங்கங்களைச் செய்வேன். சொர்க்கத்திற்குப் போவேன்.

பவழவல்லி

கி. ரா.

4

இரும்புச் சிறை

இரண்டு காவற்காரர்களுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்ட சுந்தரத்துக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவர்களிடமிருந்து எப்படித் தப்பலாம் என்று யோசித்துக் கொண்டே போனான். அவர்களைப் பார்த்தாலே பயமாய் இருந்தது. தப்புவது எப்படி முடியும்?

கொஞ்ச தூரம் போனதும் அவர்களுடன் பேச்சுக் கொடுத்துப் பார்க்கலாம் என்று நினைத்து, "ஐயா, எதற்காக என்னைப் பிடித்துப் போகிறீர்கள்? எங்கே பிடித்துப் போகிறீர்கள்?" என்று கேட்டான்.

அவர்கள் இருவரும் அவனை முறைத்துப் பார்த்தார்கள். பிறகு பேசாமல் 'கர கர' வென்று இழுத்துப் போனார்கள்.

இப்படி அவர்கள் கூட எத்தனை நேரம் நடந்தானோ தெரியாது. சுந்தரத்துக்குக் கால் வலிக்கத் தொடங்கியது. கடைசியில் ஓர் உயரமான இரும்புக் கதவண்டை வந்ததும் அந்தக் காவற்காரர்கள் நின்றார்கள். ஒருவன் கதவைத் திறந்தான். இன்னொருவன் சுந்தரத்தை இழுத்துக்கொண்டு உள்ளே போனான்.

அந்த அறை மிகச் சிறியதாய் இருந்தது. நாலு பக்கமும் சுவர்கள் இரும்பினால் கட்டப்பட்டதைப்போலக் காணப்பட்டன. ஒரு பக்கத்திலும் ஜன்னலே இல்லை.

சுந்தரத்தை உள்ளே விட்டு விட்டுக் காவற்காரன், "எங்கள் ராஜகுமாரியின் நந்தவனத்தில் நீ உத்தரவின்றி நுழைந்த குற்றத்துக்காக நாளைக் காலையில் உன்னை எங்கள் ராஜா தர்பாரில் விசாரணை செய்து உனக்குத் தண்டனை கொடுப்பார்" என்று சொல்லிவிட்டுப் படீரென்று கதவை மூடிக் கொண்டு வெளியில் போய் விட்டான்.

சுந்தரம் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். அந்த அறையிலிருந்து வெளியில் போக வழி இல்லை. ஓர் எறும்பு நுழையக் கூட வழி இல்லை. இரும்புச் சுவர்கள் அல்லவா!

ஒரே இருட்டு. அதில் உட்கார்ந்து தலையில் கையை வைத்துக்கொண்டு அழுதான் சுந்தரம். உடம்பு முழுவதும் வலி. வயிற்றுப்பசியோ சொல்ல வேண்டியதில்லை.

அவன் அப்படி உட்கார்ந்திருக்கும்போது தலைக்கு மேல் ஏதோ சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தான். என்ன

ஆச்சரியம்! ஒரு கயிற்று உரி - தங்கக் கயிற்றினால் ஆன உரி கீழே இறங்கிக்கொண்டிருந்தது. அதில் ஒரு வெள்ளித் தட்டு வைத்திருந்தது. அந்தத் தட்டில் நாலைந்து ஆரஞ்சுப் பழங்களும், ஒரு கிண்ணத்தில் பாலும் வைக்கப்பட்டிருந்தன.

ஆச்சரியத்துடன் அவன் அதைப் பார்த்துக்கொண்டிருக்கையில் அந்த உரி அவனுக்கு முன்னால் வந்து இறங்கிற்று. பழத்தைக் கண்டதும் அவனுக்கு அதைத் தின்றுவிட வேண்டும் என்றுதான் தோன்றிற்று. ஆனால் அதைத் தின்றால் என்ன ஆபத்து வருமோ? அங்கே நடப்பது எல்லாம் விசித்திரமாக அன்றோ இருந்தது? பாலையாவது குடித்தால் சிறிது தாகம் தணியுமே? ஆனால் பயமாய் இருந்தது.

கடைசியில் அவனுக்கு இருந்த பசியிலும் தாகத்திலும் அவ்வளவு பழத்தையும் தின்றுவிட்டான்; பாலையும் குடித்துவிட்டான். எப்படி இருந்தாலும் பொழுது விடிந்தால் அவனுக்குக் கடுமையான தண்டனை கிடைக்கப்போவது நிச்சயம். அதற்குள்ளாக இப்பொழுது பசியையாவது ஆற்றிக்கொள்ளலாமே என்று துணிந்துதான் தின்றான். ஆனால் அவனுக்கு ஒருவித ஆபத்தும் ஏற்படவில்லை. அவன் பாலைக் குடித்துவிட்டுக் கிண்ணத்தை வைத்ததுதான் தாமதம். உரி மேலே போகத் தொடங்கியது. அதை அண்ணாந்து பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான் அவன்.

சற்று நேரத்தில் மறுபடியும் உரி கீழே இறங்கியதைக் கண்ட சுந்தரத்துக்கு மனத்தில் பீதி தோன்றியது. இந்தத் தடவை அவனுக்கு ஆபத்து வருவது நிச்சயம்.

என்ன அதிசயம்! இப்போது உரியில் ஓர் ஆமை உட்கார்ந்திருந்தது. அவன் வெளியில் பார்த்தானே, அதே ஆமைதான்; தங்க ஓட்டுடன் கூடியது.

அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்த ஆமை அவனுக்கு முன்னால் பொத்தென்று குதித்தது. அவன் பயந்துகொண்டு எழுந்து பின்னால் போனான்.

அப்போது அது கடகட வென்று சிரித்தது. பிறகு சொல்லிற்று: "பையா! என்னைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? உனக்கு ஒன்றும் கெடுதல் செய்யமாட்டேன். உனக்கு நன்மை செய்யத்தான் வந்திருக்கிறேன்."

அவன் ஒன்றும் புரியாமல் அதன் பவழக் கண்ணைப் பார்த்துக்கொண்டு நின்றான். அது மேலும் பேசிற்று: "உனக்கு இப்போது நிறைய ஆபத்து வந்திருக்கிறது. ஆனால் நான் சொல்கிறபடி செய்தால் எந்த ஆபத்திலிருந்தும் தப்பிவிடலாம். நீ செய்வாயா?"

அவன் மெதுவாகத் தைரியமடைந்து, "என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

"நீ செய்வதாகச் சொன்னால் சொல்கிறேன்" என்றது அது.

"என்ன செய்யவேண்டும் என்று தெரிந்துகொண்டால் தானே செய்யலாம்?"

"என்ன செய்யவேண்டும் என்றால், என்னைப் பிடித்து என்னுடைய கழுத்தை உன் கைகளால் நெரித்துக் கொன்றுவிட வேண்டும்! இவ்வளவுதான். என்ன?"

அதைக் கேட்ட சுந்தரத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதைக் கொல்வதாவது! எதற்காகக் கொல்ல வேண்டும்! சாதாரணமாக ஓர் எறும்பைக்கூட அவன் நசுக்கியதில்லை. அதுவுமல்லாமல், அந்த ஆமை சாதாரணமாயிருந்தால் கூடப் பரவாயில்லை. ஒரே தங்கமயமாய் எவ்வளவு அழகாய் இருந்தது! அதைப் போய் எப்படிக் கொல்ல மனம் துணியும்?

அவன், "என்னால் முடியாது!" என்று தீர்மானமாகச் சொன்னான். ஆமை மறுபடியும் சிரித்

தது. "எனக்குத் தெரியும், நீ கொல்ல மாட்டாய் என்று. ஆனால் என்னைக் கொன்றால் உன்னுடைய கஷ்டமெல்லாம் உடனே நீங்கிப்போய்விடும். ஆனால் நீ கஷ்டப்படவேண்டும் என்று இருக்கும்போது நான் என்ன செய்ய முடியும்?" என்று அவனைப் பரிதாபமாகப் பார்த்தது.

"ஆமாம், எனக்கு என்ன கஷ்டம் வரப்போகிறது?" என்று அவன் கேட்டான்.

"அதை நான் சொல்ல முடியாது."

"இதைச் சொல்ல முடியுமா? எனக்கு யார் இப்போது உரியில் ஆகாரம் அனுப்பியது?"

"நான்தான் அனுப்பினேன்."

"இன்னொரு கேள்வி; என்னுடன் ஒரு மச்சப் பெண் பேசிக்கொண்டிருந்தாளே அவள் யார்? அவள் இப்போது எங்கே?"

"பார்த்தாயா, ஒவ்வொரு கேள்வியாகக் கேட்க ஆரம்பித்துவிட்டாய்" என்று சிரித்துவிட்டுத் தங்க ஆமை மேலும் சொல்லிற்று: "அந்தப் பெண்தான் இந்த லோகத்து ராஜகுமாரி. அதற்கு மேல் நான் ஒன்றும் சொல்ல முடியாது. நான் வருகிறேன். மறுபடியும் உன்னைச் சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டு உரியின் மேல் ஏறி உட்கார்ந்துகொண்டது. உரி கிறு கிறுவென்று மேலே போய் மறைந்துவிட்டது.

சுந்தரத்துக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதைப் போல் இருந்தது. ஆமை சொன்னபடி செய்திருக்கலாமோ என்று நினைத்தான். ஆனால் செய்திருந்தால் என்ன ஆகியிருக்குமோ? அந்த ஆமை அசுரனாக மாறி அவனையே விழுங்கியிருக்குமோ என்னவோ, யார் கண்டது?

அங்கே நடக்கும் ஒவ்வொரு விஷயமும், கதைகளில் நடப்பதைப்போல் விசித்திரமாயிருந்தது. அங்கிருந்து அவன் எப்படித் தப்பிப் போகப் போகிறான்?

அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக இருளில் கண் தெரிய ஆரம்பித்தது. அந்த இரும்பு ஜெயிலை விட்டு வெளியே போக ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்த்தான். அப்போது ஒரு மூலையில் சுவருக்கு அடியில் உள்ள கைப்பிடி அவன் கண்ணில் பட்டது.

சந்தோஷத்துடன் ஓடிப்போய் அதைப் பிடித்து இழுத்தான். அது வரவில்லை. பிறகு சுவரில் ஒரு காலை உதைந்துகொண்டு இன்னும் வலுவாக் இழுத்தான். டபார் என்ற சத்தத்துடன் கைப்பிடி வெளியில் வந்து விழுந்தது. அந்த வேகத்தில் அவனும் போய்ச் சற்றுத் தூரத்தில் விழுந்தான்.

அப்போது வெளிக் கதவை யாரோ திறக்கும் சத்தம் கேட்டுச் சுந்தரம் திடுக்கிட்டான். அவசரம் அவசரமாக அந்த இரும்பு மூடியை இருந்தபடியே மூடிவிட்டுக் கதவுப் பக்கம் ஓடிவந்தான்.

கதவைத் திறந்துகொண்டு அந்த முரடன் உள்ளே தலையை நீட்டினன். "என்னப்பா, அது சத்தம்?" என்று கேட்டான்.

சுந்தரம், "ஒண்ணுமில்லே. நான் கீழே வழுக்கி விழுந்து விட்டேன்!" என்ருன்.

"சரி. ஜாக்கிரதை!" என்று சொல்லிவிட்டு முரடன் கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டான்.

அவன் போன பின் சுந்தரம் அந்த இரும்பு மூடியண்டை ஓடினன். மெதுவாகச் சத்தம் செய்யாமல் மூச்சைக் கட்டிக் கொண்டு அதைத் தூக்கினன். திறந்ததும் கீழே குனிந்து பார்த்தான். உள்ளே ஒரு படிக்கட்டு கீழே இறங்கிச் சென்றது. தைரியத்தை வருவித்துக்கொண்டு அதன் வழியே இறங்கினன்.

கீழே இறங்க இறங்க ஒரு வகை வெளிச்சம் தெரிய ஆரம்பித்தது. அதைப் பிடித்துக் கொண்டே போனன். சுருள் சுருளாக வளைந்து சென்ற படிக்கட்டு, தரையில் கொண்டு போய்விட்டது.

அங்கே இறங்கியதும் சுந்தரம் சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு விசாலமான அரண்மனைக்குள் தான் நிற்பதை உணர்ந்தான். எங்கிருந்தோ லேசான வெளிச்சம் வீசியது. தரையெல்லாம் கண்ணுடியைப் போல் பளபளவென்று மின்னியது. சுவர்களும் கண்ணுடியைப்போல் வழவழப்பாகவும் பளபளப்பாகவும் இருந்தன.

வெளிச்சத்தின் உதவியைக் கொண்டு பதுங்கிப் பதுங்கி ஒவ்வோர் அறையாகச் சுற்றிக் கொண்டு வந்தான். எங்கும் மனித நடமாட்டமே இல்லே. அந்த அரண்மனையே உயிர் இல்லாத அரண்மனையைப் போல் தோன்றியது. இவ்வளவு அழகான அரண்மனையில் யாருமே குடி இல்லேயா? அது என்ன மந்திரத்தால் கட்டப்பட்ட மாளிகையோ? அவனே இழுத்துக்கொண்டு போய் மயக்கி அங்கே அடைப்பதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சியோ?

பயந்துகொண்டே அவன் ஓர் அலங்காரமான அறையை அடைந்தான். அந்த அறையிலிருந்து நீல நிறமான வெளிச்சம் வீசியது. பலவித வர்ணத்திரைச் சீலேகள் தொங்கின. எல்லாம் மிகமிக மெல்லிய கோரை நார்களால் பின்னப்பட்டவை. அந்த அறையின் மத்தியில் ஒரு தங்கக் கட்டில் போட்டிருந்தது. அதில் யார்? ஆம்! ஒரு பெண் உருவம் கட்டிலின்மீது சாய்ந்துகொண்டிருந்தது. 'டக்' கென்று தலேயை இழுத்துக்கொண்டான் சுந்தரம். பிறகு மெதுவாக எட்டிப் பார்த்தான். அவள் அப்படியேதான் உட்கார்ந்திருந்தாள். நல்ல வேளே, அவனே அவள் பார்க்கவில்லே!

அப்படியே திரும்பி அவள் பார்ப்பதற்குள் போய்விட வேண்டும் என்று நினைத்தான். ஆனல் போவதற்குமுன் அந்த அழகான பெண்ணே ஒரு முறை

பார்த்துவிட்டுப் போக வேண்டும் என்று தோன்றியது. மீண்டும் உள்ளே எட்டிப்பார்த்தான். என்ன ஆச்சரியம்! அந்தப் பெண் அவளே தான்! முன்பு அவன் சந்தித்தானே அதே மீன்-ராஜகுமாரிதான்! அவனுக்கு ஆகாரம் கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனாளே, அந்த அழகிதான்.

அவனுக்குச் சற்றுத் தைரியம் பிறந்தது. அடிமேல் அடி வைத்து உள்ளே நுழைந்தான். அவன் எதிரில் போகும்போது கூட அவள் தலையைத் தூக்கவில்லை. குனிந்தபடியே கையை ஊன்றிக்கொண்டு மீன் உடலை ஒய்யாரமாய் நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஒருவேளை தூங்குகிறாளோ என்று அவன் நினைத்தான். கட்டிலுக்கு வெகு சமீபத்தில் போயுங்கூட அவள் தலையை நிமிரவில்லை.

சுந்தரத்துக்குச் சங்கடமாய் இருந்தது. தூங்குகிறவளைப் போய் எப்படி எழுப்புவது? திரும்பிப் போவதும் சரியாகத் தோன்றவில்லை. தொண்டையைக் கனைத்தான். அப்போதும் அவள் எழுந்திருக்கவில்லை.

"என்ன தூக்கமா?" என்று கேட்டான். அதற்கும் அவள் அசையவில்லை. மறுபடியும் உரத்த குரலில், "ஏ, ராஜகுமாரி! என்னைத் தெரியவில்லை? எங்கே, கண்ணை விழித்துப் பார்!" என்றான்.

அவள் அசையவேண்டுமே! துளிக்கூட அசைவின்றி அப்படியே குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்குப் பக்கத்தில் வந்துவிட்ட சுந்தரம் அவள் மேல் கையை வைத்தான். என்ன ஆச்சரியம்! கைக்கு 'ஜில்'லென்றிருந்தது! சுந்தரம் திடுக்கிட்டுப் போய்க் கூர்ந்து கவனித்தான். அவன் பார்த்தது ராஜகுமாரி அல்ல; அவளுடைய உயிரில்லாத உடல். பளிங்குக் கல்லால் செய்த பொம்மையைப் போல் இருந்தது அந்த உருவம். அதன் தலையில் உள்ள கிரீடம், கழுத்திலிருந்த மாலைகள், எல்லாம் அவன் நேரில் பார்த்தபடியே இருந்தன.

நிஜமாகவே அந்த ராஜகுமாரி இறந்துவிட்டாளா? அல்லது, அவளைப்போல ஒரு பொம்மை செய்து வைத்திருந்தார்களா? அல்லது அவள் ஏதாவது சாபத்தினால் கல்லாக மாறிவிட்டாளா? அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. திகைத்துப்போய் அந்தத் தங்கக் கட்டில் அருகில் நின்றான்.

(தொடரும்)

தந்திக் கம்பத்தில் பீங்கான் கிண்ணம்

தந்திக் கம்பியில் மின்சாரம் ஓடிக்கொண்டிருக்கிறது. அது கம்பத்தின் வழியாகப் பூமியில் இறங்குவதைத் தடுக்க வேண்டும். அதற்காகவே பீங்கான் கிண்ணத்தை வைத்து அதில் கம்பியைச் சுற்றிவிடுகிறார்கள். பீங்கான் போன்ற சில வஸ்துக்களில் மின்சாரம் பாய்வதில்லை.



குள்ள முயல்

'ஜோதிமாமா'

வெள்ளை முயல்குட்டி கண்ணிலே ரத்தினம்
விதைத்து வைத்தவர்யார்?—அது
துள்ளிக் குதிப்பதும் தாவியே பாய்வதும்
ஜோராய் இருப்பதுபார்!
வெண்ணெய் உருட்டியே வைத்தது போல்உள்ள
வெள்ளை உடம்பழகும்—அதன்
கண்ணின் சிவப்பும் வளர்ந்த இருபெருங்
காதின் நீளமும்பார்!
தத்திக் குதிக்கிற குள்ள முயலுக்குத்
தாளம் போடுவேன்நான்—அது
தாவிக் குதிக்கிற போதில் அதனுடன்
தாண்டிக் குதிப்பேனே.
மெத்தப் பசிக்கிற வேளை முயலுக்கு
வேடிக்கை காட்டலாமா?—அங்கே
வேலி அருகில் முளைத்த அறுகம்புல்
வெட்டி அதற்களிப்பேன்.

சங்கீத கோஷ்டி

'சோமசன்மா'

ஓர் ஊரில் ஒரு வண்ணுன் இருந்தான். அவனிடம் ஒரு கழுதை இருந்தது. அந்தக் கழுதைக்கு ரொம்ப வயசாகிவிட்டது. வயசாகித் தாத்தாவாகப் போனபின் அதனுல் எப்படி மூட்டை தூக்க முடியும்? வண்ணுன் பார்த்தான். மூட்டை தூக்கமுடியாத ஒரு கழுதையை வைத்துக் கொண்டு எப்படித் தீனி போட முடியும்? அதனுல் அந்தக் கிழட்டுக் கழுதையை அவன் வீட்டை விட்டு விரட்டிவிட்டான்.

அந்தக் கழுதைக்கு அழுகை அழுகையாய் வந்தது. இனி மேல் எப்படிச் சாப்பிடுவது? வயசாகி விட்டால் வயிறு பசிக்காதா? அதனுல் அந்தக் கிழட்டுக் கழுதை ஒரு குட்டிச் சுவருக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டு, 'ஓ' வென்று அழுது கொண்டிருந்தது.

அப்போது அது அழும் சத்தத்தைக் கேட்டு ஒரு நாய் அங்கே வந்தது. அதைப் பார்த்ததும் நாய்க்குப் பாவமாய் இருந்தது. அது கேட்டது: "மாமா, மாமா! ஏன் இப்படி வயசு காலத்தில் அழுகிறீர்கள்? யாராவது குழந்தை குட்டிகள் செத்துப்போய்விட்டார்களா?"

தன் அழுகையை ஒருவாறு அடக்கிக் கொண்டு கழுதை சொல்லும்: "அப்படியெல்லாம் இல்லை, அப்பா. என் எஜமானன் வண்ணுன் எனக்கு வயசாகிவிட்டது என்று அடித்துத் துரத்திவிட்டான். எனக்குச் சாப்பாட்டுக்கு வழியில்லை. அதனுல்தான் அழுகிறேன்."

நாய்: பூ! இவ்வளவுதானு! இதற்காகவா அழுகிறீர்கள்?

என்னைப் பாருங்கள். என்னுடைய எஜமானும் அப்படித்தான் என்னை விரட்டிவிட்டான். ஏனென்றால் ரேஷன் வந்துவிட்டதாம். அதனால் எனக்குச் சாதம் போட முடியாதாம். இந்த மனிதர்களே இப்படித்தான். காரியம் ஆகும் வரையில் நம்மை வைத்துக் கொள்வார்கள். காரியம் ஆகிவிட்டால் விரட்டிவிடுவார்கள்.

கழுதை: அப்போ நீ என்ன பண்ணுவாய், சாப்பிட?

நாய்: கடவுள் கொடுத்த மூளை இல்லையா மாமா, நமக்கு? ஏன் வருத்தப்படுகிறீர்கள்?

கழுதை: எங்கள் ஜாதிக்கு மூளையே கிடையாதேடா?

அதைக் கேட்ட நாய் 'கட கட'வென்று சிரித்துவிட்டுச் சொல்லும்: "மாமா, என்கூட வாருங்கள். நான் உங்களுக்குப் பிழைப்பதற்கு நல்ல வழி சொல்லுகிறேன்."

இப்படியாக அந்தக் கழுதையும் நாயும் போய்க்கொண்டிருக்கையில் வழியில் ஒரு பூனை உட்கார்ந்து கொண்டு கண்ணை மூடிக்கொண்டிருப்பதைப் பார்த்தன.

இவைகளைக் கண்டதும் கண்ணை விழித்துப் பார்த்த பூனை ஒரே ஓட்டமாக ஓடிற்று. ஏனென்றால், நாய்க்கும் பூனைக்கும் எப்போதும் பகை அல்லவா? அதனால்தான். அப்போது நாய்க்கு, 'இந்தப் பூனையையும் நம்முடன் கூட்டிக் கொண்டு போனால் என்ன?' என்று ஒரு யோசனை தோன்றிற்று. உடனே அது, "அம்மா பூனையம்மா, ஏன் என்னைப் பார்த்ததும் இப்படி ஓடுகிறாய்? ஊரில் இப்போது ஏகப்பஞ்சமாய் இருக்கிறது. மனிதர்களே பாலுக்குத் தாளம் போடுகிறார்கள். உனக்கு எங்கேயிருந்து பால் கிடைக்கப் போகிறது? எங்கள்கூட வந்தாயானால் நிறையப் பால் குடிக்கலாம்" என்று சொல்லிற்று.

பூனை நின்று, "நீ என்னுடைய விரோதி. உன்னை நம்பி நான் வந்தால் அவ்வளவுதான். இந்தப் பஞ்சகாலத்தில் என்னை விழுங்கி நீ ஏப்பம் விட்டுவிடுவாய்" என்று பதில் கூறிற்று.

நாய்: அடாடா! பெண் பிள்ளை என்பது சரியாய் இருக்கிறது. சாப்பாட்டுக்கே வழியில்லாமல் இருக்கும்போது சண்டையைப்பற்றி நினைக்கலாமா? உன்னை இன்றைக்குத் தின்று விட்டால் நாளைக்கு நான் என்ன செய்வது? பேசாமல் வா.

இப்போது கழுதை முன்னாடி வந்து, "அம்மா, இந்த நாய்ப் பிள்ளையாண்டான் தங்கமான பிள்ளை. பயப்படாமல் நீ வா. நான் இருக்கிறேன்" என்று சொன்னதும் பூனை அவைகளுடன் வந்து சேர்ந்தது.

இவ்விதம் கழுதை, நாய், பூனை மூன்றும் சேர்ந்து போய்க் கொண்டிருக்கையில் வழியில் ஒரு கோழியும் இவைகளுடன்

சேர்ந்துகொண்டது. நான்கு மாக வெகு தூரம் நடந்து போய் ஒரு காட்டை அடைந் தன. ஓர் ஆலமரத்தடியில் கூட்டம் போட்டு மேலே என்ன செய்வது என்று யோசனை செய்தன.

கழுதை, "நாம் ஊர் ஊரா கப் போய்ப் பிச்சையெடுப் போம்" என்றது.

பூனை: பிச்சையெடுப்பது என்றால் எனக்கு ரொம்பக் கேவலமாய் இருக்கிறது. நான் வரமாட்டேன். ஏதாவது கௌரவமான தொழில் செய்வதுடன் சரி. ஏதாவது கடை வைத்து வியாபாரம் செய்யலாம்.

நாய்: அது மட்டும் எளிதான விஷயமா? கடையென்றால் அதற்கு எத்தனையோ சர்க்கார் கட்டுப்பாடுகள் வரும். சம் பாதிக்கிற பணம் எல்லாம் வரிகட்டத்தான் சரியாய் இருக் கும். நமக்கு என்ன மிஞ்சும்?

கோழி: நான் ஒன்று சொல் லுகிறேன். உழவுத் தொழி லுக்கு ஈடு ஒன்றுமில்லை என்று நம் பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது தான் கௌரவமான தொழில். இந்தக் காட்டிலேயே ஆளுக்கு ஒரு காணி நிலத்தை உழுது பயிரிடுவோம். சாப்பாட்டுக்குக் கவலை இல்லை.

கழுதை: அதுவும் ஆபத்துத் தான். எங்கே பார்த்தாலும் 'கிஸான்' தொந்தரவாய் இருக் கிறது.

பூனை: கடை வைப்பதுதான் சரி. ஒரு வெற்றிலை பாக்குக் கடை வைத்தாலும் போதும்.

கோழி: நிலத்தை உழுவது தான் சரி!

கழுதை: வீடுவீடாகப் பஜனை செய்துகொண்டு போனால் புண்ணியத்துக்குப் புண்ணி யம்! பிழைப்புக்குப் பிழைப்பும் நடக்கும்!

கோழி: அது கேவலம்! கழு தைக்குப் புத்தி இல்லை என் பது சரியாய் இருக்கிறது!

கழுதை: உனக்கு ரொம்ப புத்தியோ? தெரியாமலா உன்னை மனிதர்கள் பலி கொடுக்கிறார்கள்!

கோழி: உனக்கு மூளை இருந் தால் உன் முதுகில் மூட் டையை வைத்து ஓட்டுவார் களா?

கழுதை: ஏய், வாயை அடக் கிப் பேசு!

கோழி: நீ அடக்கிப் பேசு!

இப்படியாகக் கோழியும் கழுதையும் சண்டை போடவே நாய் குறுக்கே வந்து அவைகளை விலக்கிவிட்டுச் சொல்லும்: "ஏன் இப்படி அடித்துக் கொள்ளுகிறீர்கள்? நீங்கள் சொல்வது எல்லாம்



உண்மைதான். எந்தத் தொழில் செய்தாலும் இந்தக் காலத்தில் கஷ்டந்தான். ஆனல் கௌரவமான தொழில் ஒன்று எனக்குத் தெரியும். அதைச் செய்வோம்! பணமும் நிறை யக் கிடைக்கும்!"

உடனே, "அது என்ன!" என்று எல்லாம் ஆவலாய்க் கேட்டன. அப்போது நாய் பின்வருமாறு சொல்லிற்று:

"நாம் ஒரு சங்கீத கோஷ்டி ஆரம்பிப்போம். கழுதை மாமாவுக்கு நல்ல சங்கீத ஞானம் இருக்கிறது. பூனையம் மாளுக்கு இனிமையான குரல் இருக்கிறது. நம்ம கோழியோ நாட்டியத்தில் கெட்டிக்காரன். நாம் எல்லாரும் கோஷ்டியாகப் போனல் நிறையப் பணம் கிடைக்கும். டிக்கட் வசூலை நான் கவனித்துக் கொள் கிறேன்."

நாய் சொன்னதுதான் தாமதம். உடனே கழுதை சந்தோஷம் தாங்காமல் "தரன்னு" என்று ராகம் பாட ஆரம் பித்துவிட்டது. பூனை, "ஹா! ஹா! மேரே மௌலாப்புலா!" என்று ஹிந்துஸ்தானியில் பாட ஆரம்பித்தது. கோழி மட்டும் சும்மா இருக் குமா? "தத்தீ - தை, தத்தீ தை!" என்று நாட்டியம் ஆட ஆரம்பித்தது. நாய் "சபாஷ்!" என்று மடமடவென்று கையைக் கொட்டிற்று.

இப்படியே அவைகள் ஆடிப் பாடிக்கொண்டு பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டன. பட்டணத்திற்குப் போனல்தானே நிறையப் பணம் வசூல் செய்யலாம்? காட்டில் வந்து யார் பாட்டுக் கேட்பார்கள்?

அவைகள் பட்டணத்தை நெருங்கும் போது நன்முக இருட்டிவிட்டது. வழிநடந்து களைத்துப் போய் எல்லாம் ஒரு மரத்தடியில் உட்கார்ந் தன. எல்லாவற்றையும்விடக் கழுதைக்குத்தான் ரொம்பக் களைப்பாய் இருந்தது. ஏனென் முல், அதற்கு ரொம்ப வயசாகி விட்டதல்லவா? அதோடு பட் டினி வேறு.

"டேய், நாய்! என்னல் இனி மேல் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது. பசி கண்ணை இருட்டுகிறது. நாலு காலும் தூணுய் வீங்கிவிட் டது" என்றது அது.

நாய்க்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. அப் போது தூரத்தில் ஒரு விளக்கு வெளிச்சம் தெரிந்தது. அங்கே ஒரு வீடு இருந்தால்தானே வெளிச்சம் தெரியும்? வீடு இருந்தால் கட்டாயமாய் ஏதா

வது சாப்பாடு இருக்கும் அல்லவா? ஆகையினால் அங்கே போகலாம் என்று நாய் கழுதையிடம் சொல்லிற்று.

கழுதை அழுதுகொண்டே, "என்னால் நடக்க முடியவில்லையடா! அப்பா! அம்மா!" என்று முக்கி முனகிக்கொண்டே கிளம்பிற்று. நாய் அதைக் கையைப் பிடித்து, "சும்மா வாங்க மாமா! அப்படி! வாங்க, மெள்ள! இப்படி!" என்று தைரியம் கொடுத்துக் கொண்டே அழைத்து வந்தது.

நான்கும் அந்த வீட்டை அடைந்தன. வீட்டிற்குள் யார் என்று எப்படிப் பார்ப்பது? ஜன்னலோ உயரமாய் இருந்தது. அப்போது பூனை ஓடி வந்து, "நாயாரே, நான் போய்ப் பார்க்கிறேன்" என்று குப்பென்று தாவி ஜன்னல் மேல் உட்கார்ந்து எட்டிப் பார்த்தது.

அதற்குள் கழுதை, "'சாப்பாடு, சாப்பாடு இருக்கிறதா?" என்று கத்திக்கொண்டே வந்தது. நாய் அதை இழுத்துப் பிடித்துக்கொண் டிருந்தது.

"கீழே இறங்கின பூனை, 'அங்கே யாரோ இரண்டு பேர் இலையைப் போட்டுக்கொண்டு சாப்பிடத் தயாராய் உட்கார்ந்திருக்கிறார்கள். இலை நிறையச் சாதம் போட்டுக்கொண் டிருக்கிறார்கள்" என்று குசுகுசுவென்று சொல்லிற்று.

கழுதைக்குச் சந்தோஷம். "இப்போதே உள்ளே போவோம்!" என்றது. நாய் சொல்லிற்று: "நாம் இப்படியே ஜன்னல் வழியாக நம்முடைய சங்கீதக் கச்சேரியை ஆரம்பிப்போம். அவர்கள் சந்தோஷப்பட்டு நமக்குச் சாப்பாடு போடுவார்கள்."

அதன்படியே கழுதை முன்னங்கால் இரண்டையும் ஜன்னல்மேல் தூக்கி வைத்துக்கொண்டது. அதன் முதுகின் மீது நாய் ஏறிக்கொண்டது. அதற்கும் மேல் பூனை ஏறிக்கொண்டது. சேவல் ஜன்னல் சட்டத்தின்மீது தாவி உட்கார்ந்தது.

நாய், "எல்லாரும தயாரா?" என்றது.

"தயார்!" என்றது கழுதை.

"சரி, ஆரம்பியுங்கள்!"

அவ்வளவுதான். "தரன்னா!" என்று கழுதை ஆரம்பித்தது. பூனை, "ஏமி, மாயமு" என்று பாடத் தொடங்கிற்று. கோழியோ, "கொக்கர-கொக்கர கொக்கரக்கோ! கொக்கர-கொக்கர-கொக்கரக்கோ!" என்று அங்கிருந்தபடியே ஆட ஆரம்பித்தது.

இப்படி ஒரே சமயத்தில் பயங்கரமான சத்தம் கேட்டவுடனே உள்ளே சாப்பிட உட்கார்ந்திருந்த இருவரும், "ஐயையோ!" என்று அலறிக்கொண்டு எழுந்திருந்தார்கள். ஏனென்றால், அவர்கள் பேயோ

பிசாசோ வந்து விட்டது என்று நினைத்துவிட்டார்கள். அப்போது கோழி ஆடிக்கொண்டிருக்கும் போது கால் தவறி அவர்கள் மேல் விழுந்துவிட்டது. விழுந்தது தான் தாமதம்.

அவர்கள் இருவரும் பேய்தான் விரட்டுகிறது என்று விழுந்தடித்து வெளியில் ஓடிவிட்டார்கள்.

அவர்கள் போனதுதான் தாமதம். கழுதையும் நாயும் வாசல்வழியாக உள்ளே ஓடி வந்தன. சாப்பாட்டைக் கண்டவுடன் கழுதைக்கு முழு பலம் வந்துவிட்டது. நான்குமாக அங்கே இருந்த சாப்பாட்டை வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு நிம்மதியாகத் தூங்கின.

ஆகையால் பிள்ளைகளே! இதனால் தெரிவது என்னவென்றால் எவ்வளவுதான் சங்கீத ஞானம் இருந்தாலும் மிருகங்கள் பாடினால் பேய் இரைச்சலாகத்தான் இருக்குமென்பதும் பாட்டு எவ்வளவு மோசமாக இருந்தாலும் அதிருஷ்டம் மட்டும் இருந்தால் அவர்களுக்குச் சாப்பாட்டுக்குக் குறைவில்லை என்பதுமாகும்.

அட்டைப் படம்

கோடைக் காலத்தில்கூடப் பொம்மைக் குழந்தைக்குக் குளிருமோ என்று இந்தக் குழந்தைகளுக்குக் கவலை. பக்குவமாய் மெத்தையில் படுக்கவிட்டுத் திண்டு போட்டுப் போர்த்துவிடுகிறார்கள். விளையாட்டிலும் கவலை!

செவ்விந்தியச் சிறுவர்கள்

ச. கு. கணபதி ஐயர்

பிக் ஹெட்

இல் குதிரையின்மீது ஏறிக் கொண்டு நாங்கள் போய்க்கொண்டேயிருந்தோம். போகும் வழியெல்லாம் ஆகாய மளாவிய கட்டிடங்களும் பிரம் மாண்டமான மாளிகைகளும் குபேரப் பட்டணம் போல இருந்தன. ஆமாம்; நாங்கள் நினைத்த மாதிரியே அது அமெரிக்கா தேசந்தான்!

இன்றைக்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு இந்தக் கண்டம் இருப்பதே மற்ற உலகினருக்குத் தெரியாமலிருந்தது. அப்போதும் இங்கே ஜனங்கள் இருக்கத் தான் இருந்தார்கள். ஆனால் இவ்வளவு கட்டிடங்களும் வசதிகளும் இருந்தும் அவர்கள் இப்போது எங்கோ மூலை முடுக்குகளில்தான் வசித்துவருகிறார்கள்.

அந்த ஜனங்களைத்தான் நாம் செவ்விந்தியர்கள் என்று சொல்கிறோம். நாமா சொல்கிறோம்? இல்லை; அங்கே குடியேறிய வெள்ளையர்கள் வைத்த பெயர் அது! அப்போது அங்கே ஊர் ஏது, வீடு ஏது? ஒரே காடு! காட்டில் தன்னிச்சையாய்த் திரிந்து மிருகங்களை வேட்டையாடி ஜீவிக்கும் அந்தப் பழங்குடி மக்கள் இன்றைக்கும் அப்படியேதான் இருக்கின்றனர். சிலர் மட்டும் மேல் நாட்டு நாகரிகத்தில் சிலவற்றைக் கற்றுக்கொண்டு வருகிறார்கள். அடுத்த படத்தைப் பாருங்கள். இப்போது அவர்கள் வாழும் பிரதேசங்களை அதில் காணலாம்.

செவ்விந்தியர் சுதந்தர ஆர்வம் கொண்டவர்கள். அடடா, தங்கள் சுதந்தர வாழ்வில் குறுக்கிட்ட வெள்ளையர்களுடன் அவர்கள் போராடிய

போராட்டங்களுக்குக் கணக்கு வழக்கே கிடையாதாம்!

எங்கள் கீல் குதிரை அவர்கள் வசிக்கும் ஒரு காட்டுப் பிரதேசத்தில் இறங்கியது. தூரத்திலிருந்து ஒரு மிருகம் வெருண்டடித்து ஓடி வந்தது. எருமை மாடு மாதிரி பெரிய மிருகம். 'விர்'ரென்று ஓர் அம்பு எங்கிருந்தோ சீறி வந்து அதன் உடலில் பாய்ந்தது. அந்த மிருகம் பயங்கரமாய் அலறிற்று. அடுத்து அடுத்து அதன் மேல் அம்புகள் பாய்ந்ததனால் அது அப்படியே கீழே சாய்ந்து விழுந்தது. அப்படி அம்பை எய்தவர்கள் யார் என்று பார்த்தால், பதினைந்து பதினாறு வயதுள்ள இரண்டு சிறுவர்கள். எங்களுக்கு இது ஆச்சரியமாய் இருந்தது. அவர்கள் கையில் வில்லும் அம்பும் இருந்தன. அவர்களிடம் பேசிய பிறகுதான் எங்களுக்கு உண்மை விளங்கியது.

அந்த மிருகத்தின் பெயர் 'பைஸன்' என்பதால் அதற்குப் 'பைஸன் வேட்டை' என்று பெயராம். சிறுவர்கள் முதல் முதலில் இப்படிப்பட்ட வீரச் செயல் ஒன்று செய்து காட்டவேண்டுமாம். அந்த முதல் வீரச் செயலைப் பாராட்டி ஒரு பெரிய விருந்து விழாவே நடத்துவார்களாம் பெற்றோர்கள்! செவ்விந்தியச் சிறுவர்கள் மகா தைரியசாலிகள்; ரொம்பவும் பலசாலிகள். சிறு வயதிலிருந்தே அவர்களை அப்படிப் பழக்கி வளர்க்கிறார்கள். குளிரிலும், கோடையிலும் அவர்கள் ஜில்லென்ற தண்ணீரில்தான் குளிப்பார்கள். அவர்களுடைய உடையைப் பார்த்தால் ரொம்ப வேடிக்கையாக இருக்கும். அவ்வளவும் தோலால் ஆனவை. தலையில் இறகுத் தொப்பிகள். இந்த வேட்டை



அவர்களுக்குச் சர்வ சாதாரண மானது.

இவர்களுடைய வாழ்க்கையே கேட்கக் கேட்க விசித்திரமாய் இருந்தது. முதலில் செவ்விந்தியச் சிறுவர்களுடைய வாழ்க்கையைப் பார்க்கலாம்.

காட்டுக்குள்தான் ஊர். கூர் நுனிக் கோபுரம் மாதிரி தோலால் ஆன வீடுகள். செவ்விந்தியச் சிறுவனின் குழந்தைப் பருவமெல்லாம் அங்கே அந்த வீடுகளிலும் வெளி மரங்களிலும் தொங்கும் தூளியில்தான். தாய் சமைக்கும் போதும் வேலை செய்யும் போதும் குழந்தையைத் தூளியில் போட்டு விடுவாள். வெளியில் செல்ல நேர்ந்தால் முதுகிலேயே அந்தத் தூளியைக் கட்டிக்கொண்டு போவாள்.

பிறகு நடக்கத் தெரிந்ததும் செவ்விந்தியச் சிறுவர்கள் இஷ்டப்படி விளையாடுவார்கள். காட்டிலும் மேட்டிலும் ஓடியாடி அலைந்து திரிவார்கள். வில்லும் அம்பும் வைத்து எய்து பழகுவார்கள். தோல் படகில் ஏறித் துடுப்புச் செலுத்துவார்கள். ஏரியில் மீன் பிடிப்பார்கள். ராட்சஸ விளையாட்டெல்லாம் விளையாடுவார்கள். உடம்பு வஜ்ரமாக ஆக வேண்டும். என்ன செய்தால் என்ன? பெண் குழந்தைகள் அப்படியில்லாமல் பொம்மை வைத்து விளையாடுவார்கள்; மண் உருவங்கள் செய்து வர்ணம் பூசுவார்கள். புருஷனுக்கு வேண்டியதெல்லாம் செய்யக் கற்றுக் கொள்வார்கள்.

தோல் குடிசைகள்

எங்களோடு வந்த பையனுடைய பெயர் வேடிக்கையாக இருந்தது. ரன்னிங் ராபிட்! ஓடும் முயல் என்று இதற்குத் தமிழில் அர்த்தம். அவனுடைய அப்பாவின் பெயர் 'பிக் ஹெட்'. அப்படியென்றால் பெரிய தலை என்று பொருள். பிக் ஹெட் வராமல் வீட்டில் அம்மாவோ, ரன்னிங் ராபிட்டோ சாப்பிடவே மாட்டார்கள். பிக் ஹெட் காலையில் எழுந்து வேட்டைக்

குப் போவான். ராபிட்டுக்குப் பதினாறு வயதாகிவிட்டதால் அவனும் தந்தையுடன் போக வேண்டும். அன்றைக்கு என்னவோ அவன் போகவில்லை. வேட்டையில் மிருகங்கள், பட்சிகள் இவைகளைக் கொண்டு வருவான். வீட்டுக்கு வரும்போது சமையல் தயாராய் இருக்கும். மான் இறைச்சி என்றால் அவனுக்கு அபார பிரியமாம். சாப்பாடானதும் கொண்டு வந்த மிருகங்களின் தோலைப் பதனிடுவான். வாரக் கடைசியிலோ மாதக் கடைசியிலோ அவனும் அவன் பிள்ளையும் எல்லாத் தோல்களையும் 'கானோ' என்ற மெல்லிய தோல் படகில் எடுத்துப் போட்டுக்கொண்டு நதியில் பிரயாணம் செய்வார்கள். எதற்காக நதியில் போக வேண்டும் என்று எங்களுக்கு முதலில் தெரியவில்லை. ரன்னிங் ராபிட் விளக்கிச் சொன்னான். அவர்கள் இருக்குமிடம் நடுக் காடு அல்லவா? அந்த இடத்திலிருந்து வெள்ளைக்கார வியாபாரிகள் இருக்குமிடத்துக்குச் செல்ல வெகு தூரம் போக வேண்டும். அதற்கு நதிகள் ஒன்றுதான் வழி. வேறு வழியே கிடையாது. மூன்று நான்கு நாள் பிரயாணம் செய்து, தோலை வியாபாரிகளிடம் விற்று விட்டு அந்தப் பணத்துக்குப் புகையிலை, அவசியமான தட்டுமுட்டுச் சாமான்கள், தோட்டாக்கள்

ரன்னிங் ராபிட்

இவற்றை வாங்கிக்கொண்டு திரும்புவார்கள். பிக் ஹெட் போன்ற பெரியவர்களுக்குப் புகை பிடிப்பதில் இருக்கும் ஆசையும் அதில் அவர்கள் அடையும் ஆனந்தமும் சொல்லி முடியாது என்று தெரிந்து கொண்டோம்.

அன்று மாலையில் ஊரில் ஒரு திருவிழா நடந்தது. ஆண்கள் ஆட்டுத் தலை, பைஸன் தலை, பயங்கரமான மிருகங்களின் தலை போன்ற மூடிகளைத் தலையில் மாட்டிக் கொண்டு

கூத்தாடினார்கள். தப்பட்டை, கொம்பு முதலிய கருவிகள் முழங்கின. பெண்கள் மணலில் உருவங்கள் வரைந்து பல வர்ணங்களைத் தீட்டிப் பூஜை செய்தார்கள். பழங்காலத் தோலுடைகளும் நிற நிறமான பாசி மணிகளும் தரித்திருந் தார்கள். இந்தத் திருவிழாக் கொண்டாடினால் மழை பெய்து, செழிப்பு ஏற்படும் என்பது அவர்கள் நம்பிக்கை. திரும்பும் சமயம் நாங்கள் வேறு வழியாகச் சுற்றிக் கொண்டு வந்தோம். வழியில் சுமார் 14 வயதுள்ள பையன் ஒருவனை ஒரு மரத்தில் கட்டிப் போட்டிருந்தார்கள். ஒருவ ராவது அவனை அவிழ்த்துவிட வில்லை. அவனும் அந்த வழியில் போவோர் வருவோரைக் கூப் பிட்டு அவிழ்த்துவிடச்சொல்ல வில்லை.

"ஏன், இவன் ஏதாவது தப்புச் செய்தானோ? அதற்கு இப்படித்தான் தண்டிப்பதா இங்கே?" என்று கேட்டேன் நான்.

"இது தண்டனை இல்லை. நீங்கள் அவிழ்த்து விடுவதை அவன் விரும்பவும் மாட்டான். இரண்டு மூன்று நாள் பட்டினி கிடந்தாலும் தானாகக் கட்டை அறுத்துக்கொண்டு வருவதற் குத்தான் அவன் முயலுவான்" என்றான் ரன்னிங் ராபிட்.

"இப்படி எதற்காக?"

ரன்னிங் ராபிட் பெருமை யாக நிமிர்ந்து, "இதுதான் எங்கள் வழக்கம். அவன் பெரியவனாவதற்கு முன் அவனை அடித்து, ஹிம்சை செய்து ஆகாரம் தராமல் மரத் தில் கட்டிவைப்பதுதான் எங்கள் வழக்கம். அவனாக எப்படியாவது கயிற்றை அறுத்துக்கொண்டு வந்து விட்டால் சமூகத்தில் அவ னுக்கு வீரன் என்ற அந்தஸ்து உண்டு. அவனால் வரமுடியா விட்டால் அவன் பெண்ணைப் போலத்தான் வாழ வேண்டும். கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது. வீட்டோடு பெண்க ளுடன் சமையல் வேலை செய்து கொண்டுதான் வாழ வேண் டும். ஆகவே எந்தச் செவ் விந்தியச் சிறுவனும் இதைக் கொடுந்தண்டனையாகக் கருத மாட்டான்" என்றான்.

"சரிதான்" என்றேன் நான். வேறு என்ன சொல்வது? நம் ஊரில்கூட 'கல்லுளிமங்கன்' என்று சொல்வதில்லையா? அவர்களைச் சேர்ந்தவர்கள் போலிருக்கிறது என்று எண் ணிக்கொண்டேன்.

சிலர் இப்போது பஞ்சாடை களும் நீராவிப் படகுகளும் உபயோகித்து நாகரிகம்பெற்று வருகிறார்களாம். ஆனால் அடர்ந்த காட்டுப் பிரதேசங் களில் வாழுகிறவர்கள் பழைய ரீதியிலேயே இருக்கிறார்கள்!

விசித்திர உலகத்தின் விந்தை கள் பலவாக இருக்கின்றன.

கனவு பலித்தது

'ஸேஔ'

"ஸ மபதநிசரி...நிதபம... கரிசநிதநிநிச...டுடு டுட்டுட்டுட்டு..."

"போருமேடா....நிறுத்தேன்."

"சரி சரி சரி ரி ச நி...டுட்டுட்டுட்டுடுடுடு."

"ஒரு தரம் சொன்னல் தெரியல்லே? உன் அப்பா இப்படித்தான் வேலே வெட்டி ஒண்ணும் இல்லாமே 'சநி சநி'ன்னு பாடிப் பாடி வீட்டைச் சனி பிடிச்சுது; அவரும் தொலேஞ்சார்! நீயும் வேறே ஆரம்பிச்சுட்டயா?"

முரளி ஸ்வரம் போட்டுப் புல்லாங்குழல் பழகிக்கொண்டிருந்தான். அந்தச் சுவாரஸ்யத்தில் அம்மா சொன்னது அவன் காதில் விழுந்தால் தானே? "சா சா நி நீ சா...டுட்டுடுடு"

அம்மா எரிச்சலுடன் பின் கட்டிலிருந்து வேகமாக வந்தாள்; "படிப்பைக் காணேம்; எழுத்தைக் காணேம்! சங்கீதமாம் சங்கீதம்! நீ சா நீ சா என்னடா? நீ தான் செத்துத் தொலே" என்று முரளியின் முதுகில் நாலு அறை அறைந்தாள்; "என் கண்ணெதிரே நிக்காதே! போய்விடு வெளியிலே" என்று கத்தினுள்.

முரளி, பாவம், 'நாம் என்ன தப்புச் செய்தோம்? பாடத்தானே பாடினேம்?' என்று தான் எண்ணினன். அவனுக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. துக்கம் தொண்டையை அடைத்தது. கண்ணிலிருந்து நீர் வழிந்தது. புல்லாங்குழலே எடுத்துக்கொண்டு வெளியே கிளம்பினன்.

வெயில் ஏறிவிட்டது. முரளிக்குக் கால் சோர்ந்தது. பத்து வயசுப் பையன்தானே; எவ்வளவு தூரம் நடப்பான்? ஊரிலிருந்து நாலாம் மைலில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அங்கே வந்ததும் களேப்புத் தாங்காமல் அந்த மரத்தடியில் உட்கார்ந்தான். வெயில் வெளிச்சம் கண்ணேக் கூசியது. முழங்காலில் முகத்தைப் புதைத்துக்கொண்டு யோசனேயில் ஆழ்ந்தான்.

* * *

ஆ! அது என்ன?...புல்லாங்குழல் ஓசை கேட்கிறதே! ஆகா, அந்த மோகன ராகம் எவ்வளவு அற்புதமாக இருக்கிறது! அந்தமாதிரி அவனல் வாசிக்க முடியுமா?... ஊஹூம் ......

முரளி உற்றுக் கேட்டான். ஒரு கிழவர் கையில் புல்லாங்குழலோடு தடியை ஊன்றிக்கொண்டே வருவது தெரிந்தது. பாவம், கிழவர் குருடர். முரளி எழுந்து, "தாத்தா, தாத்தா!" என்று கூப்பிட்டான்.

"யாரப்பா நீ? இது எந்த ஊர்?"

"இது நாங்கூர். நான்தான் முரளி, தாத்தா! நீங்கள் இவ்வளவு நன்ளு வாசிக்கிறீர்களே...எனக்குக் கற்றுத்தர மாட்டீர்களா? இதோ பாருங்கள். என் கிட்டக்கூடப் புல்லாங்குழல் இருக்கிறது."

கிழவர் அவனை அன்போடு தொட்டுத் தடவிக்கொடுத்தார். "தாத்தா, எங்க வீட்டுக்கு வாருங்களேன்" என்றான் முரளி.

கிழவரும், "சரி" என்று அவனோடு புறப்பட்டார். இரண்டு பேரும் ஊருக்குள் நுழைந்தார்கள். ஊர்ப்பிள்ளைகள் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அங்கே ஒரு மரத்தில் கொய்யாப்பழம் பழுத்துத் தொங்கியது. சிலபேர் மரத்தின்மேல் ஏறி அதை உலுக்கிக்கொண்டிருந்தார்கள். முரளிக்கும் வாய் ஊறியது. அவனும் அவர்களோடு கலந்துகொண்டான்.

திடீரென்று கிழவரின் ஞாபகம் வரவே திரும்பிப் பார்த்தான். குண்டுப்பயல், "தாத்தா நடராஜா ஆகப்போகிறார் பாருங்கடா" என்று சொல்லிக்கொண்டே கிழவரின் காலைத் தட்டிவிட்டான். பாவம், கிழவர் கால் இடறிக் குப்புற விழுந்தார்.

முரளிக்குக் கோபம் கோபமாக வந்தது. அவன் கிழவரைத் தூக்கிவிட்டான்; அவர் காலைத் தட்டிவிட்ட குண்டுப் பயலின் தொப்பையில் ஓங்கி ஒரு குத்து விட்டான். அதற்குள் மற்றப் பிள்ளைகள், "நீ யாரடா நடுவிலே?" என்று முரளியைப் பிடித்துக் கொண்டார்கள்.

முரளி திமிறினான்; முடியவில்லை. "அம்மா, அம்மா" என்று கத்தினான். ஒரு பையன் கப்பென்று அவன் வாயை மூடினான். இன்னும் நாலு பேர் சேர்ந்து அவனைக் குப்புறத்

தள்ளி அவன்மேல் உட்கார்ந்து கொண்டார்கள்.

அப்போது கிழவர் அற்புதமாகப் புல்லாங்குழல் ஊதுவது கேட்டது. அந்த மாதிரி ராகத்தை முரளி இதுவரையில் கேட்டதே யில்லை.

"ஹுஹ்...ம்ஹ்ஹ்..." என்று ஒரு கர்ஜனை கேட்டது.

பிள்ளைகளெல்லாம் திடுக்கிட்டு எழுந்தார்கள். அம்மாடி! கிழவரின் பக்கத்தில் ஒரு பெரிய சிங்கம்! அந்தத் துஷ்டப் பிள்ளைகள் முரளியை விட்டுவிட்டு மரத்தடியில் போய் ஒளிந்து கொண்டார்கள்.

கிழவர் முரளியிடம், "தம்பி, பயப்படாதே! சிங்கம் உன்னை ஒன்றும் செய்யாது. அந்தப் பயல்களைத்தான் தின்னப் போகிறது" என்றார்.

அந்தப் பிள்ளைகள் நடுநடுங்கிப் போனார்கள். "தாத்தா, தாத்தா, இனிமேல் அப்படியெல்லாம் செய்ய மாட்டோம்" என்று அலறினார்கள்.

கிழவர் இடி இடியென்று சிரித்தார். "முரளி ஊதினால்தான் சிங்கம் இந்த இடத்தை விட்டு மரியாதையாகப் போகும்...நான் என்ன செய்கிறது?" என்றார்.

"முரளி! முரளி! இனிமேல் நல்லதனமாக இருக்கிறோம். அதைப் போகச் சொல்லேன்" என்று கெஞ்சினார்கள், அந்தப் பயங்கொள்ளிகள்.

முரளிக்கு இளகின மனசு. இருந்தாலும், "நான் நிறுத்துங்கள் என்கிறவரை தோப்புக்கரணம் போடுங்கள்" என்று உத்தர விட்டான். விதியே என்று அவர்களும் போட்டார்கள். தொப்பையிலிருந்து வேர்வை வழிய அந்தக் குண்டுப் பயல் விழுந்து விழுந்து தோம்புக்கரணம் போடும் காட்சியைப் பார்க்கவேண்டுமே; வேடிக்கையாக இருந்தது.

முரளிக்குச் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிட்டது. கிழவரும் சிரித்தார். அந்தச் சிங்கங்கூட, "ஹஹ் ஹ்ஹ்ஹா" என்று சிரித்ததென்றால் பாருங்களேன்!



கடைசியில் முரளி புல்லாங்குழலை எடுத்தான்.

இதென்ன, இவ்வளவு நன்ருக வாசிக்கிருனே முரளி!... அவனுக்கே வெகு இனிமையாக இருந்தது.

சிங்கம் மறைந்துவிட்டது!

*　*　*

"தம்பி!"

முரளி திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான். அவன் அருகில் நிஜமாகவே ஒரு கிழவர் நின்றிருந்தார். "தம்பீ! இதுதானே நாங்கூர்?" என்று அவர் கேட்டார்.

"ஆமாம்."

"நாகராஜ சர்மா வீடு எது?"

"எங்கள் வீடுதான்...நீங்கள் யார், தாத்தா?" - அப்போதுதான் கிழவர் கையிலும் ஒரு புல்லாங்குழல் இருப்பதை முரளி பார்த்தான்.

கிழவர் புன்சிரிப்போடு, "இருக்கட்டும்; சொல்கிறேன். வீட்டுக்கு என்னை அழைத்து போகிருயா?" என்ருர்.

முரளி கண்ணைக் கசக்கிக் கொண்டு அவரை மறுபடியும் பார்த்தான். அப்படியானல் அவன் கண்டது பகல் கனவு தான். இவர் குருடர் இல்லை!...

முரளியும் கிழவரும் கை கோத்துக்கொண்டு புறப்பட்டார்கள். நல்ல வெயில். வழியில் முரளியோடு பேச்சுக் கொடுத்த போது அவனுக்குச் சங்கீதத்தில் நல்ல ஞானம் இருப்பதைக் கிழவர் தெரிந்துகொண்டார்.

பெற்ற வயிறு இல்லையா? அம்மா வாசலில் நின்று வெயில் கண்ணைக் கூச, பையன் வருகிருனு என்று பார்த்துக் கொண்டிருந்தாள். யாரோ ஒரு கிழவரோடு பையன் வருவது தெரிந்தது. கிழவரும் முரளியும் வீட்டுக்குள் நுழைந்தார்கள்.

முரளியின் அம்மா தன் புருஷனிடம் இந்தக் கிழவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாள். அடக்க ஒடுக்கமாக அவரை நமஸ்கரித்தாள்; முரளி ஆவலோடு, "யாரம்மா இவர், சொல்லேன்?" என்று கேட்டான்.

"உன் அப்பாவின் குரு-சரப சாஸ்திரிகள்" என்ருள் அம்மா.

முரளி துள்ளிக் குதித்தான். மகா வித்துவான் சரப சாஸ்திரிகளா இவர்? - அவனுக்குத் தலை கால் தெரியவில்லை.

தாயும் மகனும் கிழவரை அன்போடு உபசரித்தார்கள். கிழவர் பேச்சை எடுத்தார்: "பையனுக்கு நல்ல ஸ்வர ஞானம் இருக்கிறது. இவனை அழைத்துக்கொண்டு போகலாமா? என் கிட்ட இருந்தால் பின்னல் நல்ல பெயர் எடுப்பான், அம்மா...உனக்கு வேண்டிய சௌகரியமெல்லாங்கூடச் செய்து தருகிறேன். என்ன சொல்கிருய்?" என்ருர்.

அம்மாவின் கண்ணில் நீர் ததும்புவதைப் பார்த்து முரளி முதலில், 'நம் எண்ணம் ஈடேருதோ?' என்று நினைத்தான். ஆனல் அம்மா கண்ணைத் துடைத்துக்கொண்டு, "அதற்கு நாங்கள் கொடுத்துவைக்க வேண்டுமே!" என்று சொன்னுள். முரளி, 'அப்பாடா' என்று பெருமூச்சுவிட்டான்.

அவன் கனவு பலித்து விட்டது!

கிட்டுவின் தந்திரம்

தியாகராஜன்

கிட்டுவின் அக்காவுக்குச் சமீபத்தில்தான் கல்யாணமாகியிருந்தது. அந்த மாப்பிள்ளை ஊரிலிருந்து வந்திருந்தார். அவர் எதிரே போகவோ பேசவோ புது மனைவிக்கு வெட்கம்; கூச்சம். கிட்டுதான் அவர்களுக்குத் தூதன். அவனை அனுப்பித்தான் எந்தச் சமாசாரத்தையும் கணவனிடம் சொல்லிவிட்டு வரச் சொல்லுவாள். அவரும் கிட்டுவிடம்தான் பதில் சொல்லி அனுப்புவார்.

சில நாட்கள் இப்படிக் கழிந்தன. ஒரு நாள் மத்தியானம் சாப்பிட்டபிறகு மாப்பிள்ளை பேப்பர் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது கிட்டு உள்ளேயிருந்து ஓடிவந்து, "அத்தான்! அக்கா இன்று சினிமாவுக்குப் போகலாமா என்று கேட்கிறாள்" என்றான்.

மாப்பிள்ளைக்குச் சந்தோஷம் பொத்துக்கொண்டு வந்தது. "ஓ! போகலாமே! சரி போகலாம் என்று நான் சொன்னதாகச் சொல்லு, போ" என்றார்.

கிட்டு உள்ளே போய்விட்டு மறுபடியும் ஓடி வந்தான். மாப்பிள்ளையிடம் போய், "அத்தான்! சினிமாவில் கூட்டம் அதிகமாய் இருக்குமாம். அதனால் முன்னாலேயே இரண்டு டிக்கட்டுகளை ரிசர்வ் செய்யச் சொன்னாள் அக்கா" என்றான்.

உடனே அவர், "நீ போய் அக்காவிடம் அத்தான் உன்னைச் சரியாக ஐந்து மணிக்கு ரெடியாய் இருக்கச் சொன்னார் என்று சொல்லிவிடு. நான் இப்போதே போய் டிக்கட் ரிசர்வ் செய்துவிட்டு வருகிறேன்" என்று அவனை அனுப்பிவிட்டு, சினிமாக் கொட்டகைக்குப் புறப்பட்டார்.

சாயங்காலம் மணி ஐந்து அடித்தது. கிட்டு அத்தானிடம் ஓடிவந்து, "அக்காவுக்கு இப்போது ரொம்ப வேலை இருக்கிறதாம். வர ஒழியவில்லையாம். உங்களையும் என்னையும் மட்டும் சினிமாவுக்குப் போய்விட்டு வரச் சொன்னாள்" என்றான்.

அத்தானுக்குப் பெரிய ஏமாற்றமாகப் போய்விட்டது.

மறுநாள் காலையில் கிட்டு எழுந்திருக்காததால் அவன் அக்காவே தன் கணவனுக்குக் காபி கொண்டு வந்தாள்.

"சினிமாவுக்கு வரமுடியாமல் என்ன வேலை வந்துவிட்டது, உனக்கு?" என்று கேட்டார் அத்தான்.

"எனக்கா? ஒரு வேலையும் இல்லையே! யார் அப்படிச் சொன்னது?" என்று கேட்டாள் அவள்.

அப்போதுதான் அவர்களுக்கு, கிட்டுவின் விஷமம் புரிந்தது. "சரி; போனால் போகிறான். அவனை ஒன்றும் சொல்லி வைக்காதே! குறும்புக்காரப் பயல்! இனியும் சமாசாரம் சொல்ல நமக்கு ஆள் வேண்டுமே!" என்றார் அவர் சிரித்துக்கொண்டே. அவளும் சிரித்தாள்.

கிட்டு தூங்குபவன் போல இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தான்!

ஜாஜாலியும் குதிரையும்

வாசு

குடிலனுக்கு அறுபது வயசாகிவிட்டது. இளையாளின் பேச்சைத் தட்ட முடியவில்லை. அவள் அவனிடம், "உங்கள் பிள்ளையையும் மகளையும் இங்கே என்னால் வைத்துக்கொள்ள முடியாது. இந்த வீட்டில் நான் இருக்க வேண்டுமானால் அவர்களை எங்கேயாவது கொண்டுபோய் விட்டுவிடுங்கள்" என்றாள். குடிலன் பார்த்தான். அவர்களைக் காட்டில் கொண்டுவிட ஒப்புக்கொண்டான்.

ஒரு நாள் விடியற்காலையில் குடிலன் மூத்தாள் மகன் அஜயனையும் மகள் ஜாஜாலியையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டான். திக்குத் தெரியாத காட்டில் இவர்கள் எப்படித் தவிப்பார்களோ என்று அவனுக்கு வருத்தமாய் இருந்தது. ஜாஜாலி மடியில் அரிசிப் பொரியைக் கட்டிக்கொண்டு வந்திருந்தாள். அதை வழி நெடுக ஒவ்வொன்றாய் எடுத்துப்போட்டுக் கொண்டே போனாள். முன்னால் சென்ற குடிலனுக்கு இது தெரியாது.

கடைசியாக எப்படியோ நடுக்காட்டுக்கு வந்து சேர்ந்தார்கள். வழி நடந்த களைப்பினால் அயர்ந்து தூங்கிப் போனார்கள். இந்தச் சமயம் பார்த்துக் குடிலன் எழுந்தான். இளையாள் கோபத்துக்குப் பயந்து சந்தடி செய்யாமல் அவர்களை அங்கேயே விட்டுவிட்டுத் திரும்பிச் சென்றான்.

அஜயனும் ஜாஜாலியும் காலையில் விழித்துக் கொண்டார்கள். எழுந்து பார்த்தால் அப்பாவைக் காணவில்லை. வெகுநேரம் வரை தேடிப் பார்த்தார்கள். குடிலன் இனித் திரும்பமாட்டான் என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

"அண்ணா! அப்பா நம்மை வந்து அழைத்துப் போகமாட்டார். வீட்டுக்குத் திரும்ப நான் ஒரு வழி சொல்கிறேன். வழிநெடுக அரிசிப் பொரி போட்டு வந்திருக்கிறேன். அதைப் பார்த்துக்கொண்டு ஊருக்குப் போகலாம்" என்றாள் ஜாஜாலி.

ஆனால் என்ன துரதிருஷ்டம்! இரவோடு இரவாக அந்தப் பொரியை எல்லாம் எறும்புச்சாரி ஒன்று இழுத்துச் சென்றுவிட்டது. அவர்கள் இதைக் கண்டு கண் கலங்கினார்கள். தெய்வமே என்று கால் போன வழி நடந்து போனார்கள். காடு என்றால் அது சாமானியக் காடா? அப்பாடா! பயங்கரமான காடு.

ஆகாயத்தை முட்டும் மரங்கள் அடர்ந்து நின்றன. பகலில்கூட அடர்ந்த புதர்கள் வழிதெரியாமல் மறைத்தன. இரவில் வன விலங்குகளின் கோர கர்ஜனை குலையை நடுங்கவைக்கும்.

அஜயன் கனிகளையும் கிழங்குகளையும் கொண்டு வருவான். அதைக் காட்டுத் தீயில் சுட்டு இருவரும் பசியாறுவார்கள். இப்படியே அவர்கள் வழி தெரியாமல் பல நாட்கள் அலைந்து திரிந்தார்கள்.

அஜயனுக்கு ஒரு நாள் அடக்க முடியாத தாகம். அவர்கள் போன திக்கில் நீர் நிலையே தென்படவில்லை. தளிர்களையும் இலைக் கொழுந்துகளையும் தின்று பார்த்தான். தாகம் தணிவதாய் இல்லை. நாக்கு வறண்டு, நெஞ்சு உலர்ந்து போயிற்று.

"அண்ணா, கிழக்கே ஜலம் இருக்கும் போலிருக்கிறது. குளிர் காற்று அடிக்கிறது" என்றாள் ஜாஜாலி.

அது உண்மையாயிற்று. அந்தப் பக்கத்தில் ஒரு குட்டை இருந்தது. அஜயன் குட்டையில் இறங்கப் போனான். அதற்குள் ஜாஜாலி கூக்குரலிட்டு, "அண்ணா, அண்ணா! இந்த ஜலத்தைக் குடிக்காதே" என்று கூவினாள்.

அஜயன் திரும்பி, "ஏன் என்னைத் தடுக்கிறாய்?" என்று கேட்டான்.

அங்கே ஒரு கல்வெட்டு இருந்தது. ஜாஜாலி அதைக் காட்டி, "இதோ பார். இந்தத் தண்ணீரைக் குடித்தால் குதிரையாகிவிடுவார்களாம்! வேண்டாம் அண்ணா, வேண்டாம். நல்ல வேளை, இதைக் குடிக்காமல் இருந்தாயே" என்றாள். அஜயனால் தாகத்தை அடக்கவே முடியவில்லை. இன்னும் சற்றுப் போனால் உயிரே போய்விடும் போல் இருந்தது.

"ஜாஜாலி, சற்றுப் பொறு. வேறு எங்கேயாவது தண்ணீர் இருக்கிறதா, பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுத் திரும்பினான்.

ஜாஜாலிக்கு வேறு



எங்கோ போவதுபோல் போக்குக் காட்டிவிட்டு, அஜயன் எதிர்க்கரை வழியாக அந்தக் குட்டைக்கே வந்தான். தாகத்தினுல் உயிர் விடுவதைவிடக் குதிரையாகி விடுவதே மேல் என்று தோன்றிற்று. குட்டையில் காலை வைத்துத் தண்ணீரை ஒரு வாய் குடித்ததும் அவன் காலெல்லாம் குதிரைக் காலாக மாறிவந்தது. "ஹோ" என்று பயத்தினுல் கூப்பாடு போட்டான். ஆனுல் அந்தச் சத்தத்தைக் கேட்டு ஜாஜாலி வருவதற்குள் அவன் பொன்னிறம் கொண்ட பஞ்சகல்யாணிக் குதிரையாகவே மாறிவிட்டான்.

ஜாஜாலி அழுதாள். "அண்ணு, நீயும் குதிரையாகி விட்டாயே. இனி எனக்கு யார் துணை?" என்று அங்கலாய்த்தாள். குதிரையும் கண்ணீர் வடித்தது. ஏதாவது பேச நினைத்தால் கனைப்புச் சத்தந்தான் வந்தது.

நாட்கள் கழிந்தன. ஜாஜாலி குதிரைச் சவாரி செய்யப் பழகிக் கொண்டுவிட்டாள். காடு, மேடு எல்லாம் சுற்றித் திரிந்தார்கள். ஒரு நாள் ஜாஜாலி மரத்தின் மேலேறிப் பழம் பறித்துக்கொண் டிருந்தாள். குதிரை கீழே நின்றது. அப்போது 'ஹா-ஹூ' என்ற இரைச்சலுடன் ஒரு கூட்டம் அவர்களைச் சூழ்ந்துகொண்டது.

காட்டில் வேட்டையாட வந்த அரசன் அந்தக் குதிரையைப் பிடித்துவரத் தன் பரிவாரத்துக்கு உத்தரவிட்டான். அரசன் அப்போதுதான் பட்டத்துக்கு வந்திருந்தான். தனக்கு ஏற்ற குதிரை என்று அதைப் பார்த்ததும் ஆசை உண்டாயிற்று. இந்தச் சமயம், "குதிரை என்னுடையது; அதைத் தயவு செய்து விட்டுவிடுங்கள்" என்று மரத்தின்மேல் இருந்தபடி ஜாஜாலி கூறினுள்.

அரசன் காதில் இந்த வார்த்தைகள் விழுந்தன. அப்சரப் பெண்ணைப் போல ஜாஜாலி பழத்தைப் பாதி கடித்தும் பாதி கடிக்காமலும் இருப்பதைக் கண்டான்.

"குதிரை வேண்டுமானுல் கீழே இறங்கிவா!" என்ருன் அரசன். பரிவாரங்கள் விலகி நின்றன. ஜாஜாலி அவன் அரசன் என்பதைத் தெரிந்து கொண்டாள். பதில் பேசாமல் கீழே இறங்கி வந்து மரியாதையாக நின்ருள்.

"உன்னைப்போன்ற ஒரு பெண்ணை நான் இதுவரையில் பார்த்ததில்லை. இந்தக்காட்டில் தனியாக என்ன செய்கிருய்? என்னேடு வந்துவிட்டால் என் ராஜ்யத்துக்கே உன்னை ராணியாக்கிவிடுவேனே" என்ருன் அரசன்.

ஜாஜாலி இதற்கும் பதில் சொல்லவில்லை. பயங்கரமான காட்டில் அநாதையாக அலைபவளுக்கு இப்படி ஓர்

அதிருஷ்டமா என்றுதான் அவளுக்குத் தோன்றியது.

கடைசிவரையில் அவள் குதிரையைப் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அரசன் அவளையும் குதிரையையும் தன் தேசத்துக்கு அழைத்துச் சென்றான். அவளை விட்டுப் பிரியாமல் அந்நியோந்நியமாய் இருந்தான். அவளை ராணியென அறிவித்து ஆடம்பரத்துடன் தடபுடலாய் மணந்து கொண்டான்.

இப்படிப்பட்ட அழகியை ஒருவரும் பார்த்ததில்லை என்று அந்தத் தேசமக்கள் ராணியைக் கொண்டாடினார்கள். அரசன் அவளிட்ட பணியைச் செய்ய, பல தாதிகளை நியமித்தான். அவளுடைய விருப்பப்படியே பஞ்சகல்யாணிக் குதிரையைத் தோட்டத்தில் கட்டி வைத்தான். அதை அரசியைத் தவிர வேறு யாரும் தொடக் கூடாது என்று கட்டளையிட்டான்.

குதிரை தன் தங்கைக்கு வாய்த்த அதிருஷ்டத்தைக் கண்டு சந்தோஷப்பட்டது.

சந்தோஷந்தான் எப்பொழுதும் நிலைப்பதில்லையே! தாதிகளில் ஒருத்தி ராணியிடம் அசூயை கொண்டாள். அவள் கிட்டத்தட்ட ராணியைப் போலவே இருப்பாள். ஆடையை மாற்றி அணிந்துகொண்டால் அவள்தான் ராணியோ என்றுகூடச் சந்தேகம் வந்து விடும். அவள் ஒரு மந்திரவாதி

யிடம் சிநேகம் கொண்டிருந்தாள். அந்த மந்திரவாதி அவளுக்கு ஒரு மந்திரக் கொண்டைஊசி கொடுத்திருந்தான். ராணியை எப்படியாவது தொலைத்துத் தானே ராணியாவதற்கு அந்தத் தாதி சமயம் பார்த்துக்கொண் டிருந்தாள். ஆனால் அவள் மேலுக்கு எவ்வளவு பிரியம் காட்டினாள்! ராணி ஜாஜாலிக்கு அவளிடம் தான் நம்பிக்கை அதிகம்.

ஒரு நாள் தாதி எதிர்பார்த்த சமயம் வந்தது. ஜாஜாலி குதிரையாக இருந்த தன் அண்ணனை அழைத்துக் கொண்டு சிறிது நேரம் தோட்டத்தில் உலாவினாள். பால் நிரம்பிய ஊற்றில் அவள் ஸ்நானம் செய்வது வழக்கம். அந்தச் சமயத்தில் தாதி அந்த மந்திரக் கொண்டை ஊசியை ராணியின் நீண்ட கேசத்தில் செருகிவிட்டாள்.

அந்த மந்திர ஊசியின் மகிமை அது தலையில் இருக்கும் வரையில் நித்திரையில் ஆழ்ந்துபோக வேண்டியது தான். ராணியும் ஒரே நித்திரையில் ஆடி விழுந்தாள். தாதி அவசர அவசரமாக அவளுடைய உடைகளைக் களைந்தாள். தான் உடுத்துக் கொண்டாள். ராணிக்கு அவளுடைய ஆடைகளைப் புனைந்து அந்தப் பால் ஊற்றில் தூக்கிப் போட்டுவிட்டாள். பக்கத்தில் நின்ற பஞ்ச கல்யாணிக் குதிரை உடனே வாலை விசிறிக்கொண்டு கட்டுக் கடங்காமல் அரண்மனையில் ஆர்ப்பாட்டம் செய்தது. தாதிக்கு உண்மை தெரியாது; அஜயன் தான் பஞ்சகல்யாணிக் குதிரை என்பது அவளுக்குத் தெரிந்திருந்தால் அவள் அந்தக் காரியத்தைச் செய்திருப்பாளா?

யார் யாரோ குதிரையை அடக்கப் பார்த்தார்கள். குதிரை கட்டுக்குள் அடங்கவில்லை. கடைசியில் அரசனே வந்தான். குதிரையைப் பிடித்துத் தட்டிக் கொடுத்தான். குதிரை சிறிது அடங்கி நின்றது. அவன் குதிரையின் மேல் ஏறியதும் அது ஒரே ஓட்டமாக ஓடிப் பால் ஊற்றுக்கு வந்தது.

அரசன் இதில் ஏதோ விஷயம் இருக்கிறது என்று பேசாமல் குதிரை செய்வதைக் கவனித்தான். ராணி வேஷத்தில் இருந்த தாதி அரசனிடம் ஓடி வந்து, "அந்தக் குதிரையை ஒரே வெட்டாக வெட்டிவிடுங்கள். அது என்னை முதலில் இப்படித்தான் இந்த ஊற்றில் போட்டுக்கொல்லப் பார்த்தது" என்றாள்.

அரசன் அவள் சொல்வதை உண்மை என்று நம்பி, தன் உடைவாளை உருவினான். ஆனால் பஞ்சகல்யாணிக் குதிரை அவனை ஒரு தள்ளில் கீழே தள்ளிவிட்டுப் பால் ஊற்றில் பாய்ந்தது.

அடுத்த கணமே பால் ஊற்றிலிருந்து ஒரு யௌவன

புருஷன் வெளிவந்தான். பஞ்ச கல்யாணிக் குதிரை மீண்டும் சுய உருவம் பெற்று அஜயனாக மாறிவிட்டது. தாதி கீழே சற்று முன் தள்ளிவிட்ட ராணியை அஜயன் கையில் மேலே தூக்கிவந்து கரையில் போட்டான்.

அரசன் ஆச்சரியமும் திகைப்பும் அடைந்து, "அடே யாரப்பா நீ? அது யார், அசல் என்னுடைய ராணியைப் போலவே இருக்கிறாளே!" என்றான்.

தாதியின் உடல் வெடவெட வென்று நடுங்கிக்கொண் டிருந்தது. இதற்குள் காவலாளிகளும் அரண்மனைச் சிப்பந்திகளும் ஓடி வந்தார்கள்.

அஜயன், "இதோ இந்தக் கள்ளியைப் பிடித்துக் கட்ட உத்தரவிடுங்கள். எல்லாவற்றையும் பிறகு சொல்கிறேன்" என்றான்.

அரசன் உடனே, "ஏதோ சூது நடந்திருக்கிறது. இவளைப் பிடித்துக் கட்டுங்கள்" என்று உத்தரவிட்டான்.

"இவள் ஜாஜாலியின் தாதி; அவளைப் பிடித்துத் தூக்கி இந்த ஊற்றில் எறிந்துவிட்டாள். நான் ஜாஜாலியின் அண்ணன். குட்டை ஜலத்தைக் குடித்ததனால் குதிரையாகிவிட்டேன்" என்று கூறினான் அஜயன்.

அரசன் புலம்பினான். நகர மக்கள் வருந்தினார்கள். 'ஜாஜாலி! ஜாஜாலி' என்று அஜயன் கதறினான். என்ன செய்து என்ன! ஜாஜாலி கண்ணை விழிக்கவேயில்லை.

அவளை ராஜாங்க முறைப்படி அடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். தலையை வாரிவிட்டுப் பூவைக்க வேண்டுமே! அதை ஒரு தாதி செய்தாள். தலையில் இருந்த கொண்டை ஊசியை எடுத்து அவள் தூர எறிந்தாள்.

என்ன ஆச்சரியம்! ஜாஜாலியின் உடல் அசைவது தெரிந்தது. அரசன் ஓடிவந்தான். அஜயன் ஓடிவந்தான்; அரண்மனை ஆட்கள் அத்தனை பேரும் வந்தார்கள். ஜாஜாலி மெதுவாகக் கண்ணைத் திறந்தாள். நீண்ட கனவிலிருந்து விழிப்பவளைப் போலச் சுற்றுமுற்றும் பார்த்து, "இதெல்லாம் என்ன?" என்றாள்.

அரசனையும் அவன் பக்கத்தில் நின்ற அஜயனையும் கண்ட அவள், "அண்ணா!" என்று எழுந்திருந்தாள்.

பிணக் கோலத்தில் இருந்த ஜாஜாலி சற்று நேரத்தில் மணக் கோலத்தில் விளங்கினாள். எங்கும் குதூகலம்! எங்கும் கொண்டாட்டமாய்க் கொண்டாடினார்கள்.

தாதியைச் சித்திரவதை செய்து சிறையில் அடைத்தார்கள்! குடிலன் ஊரிலிருந்து ஓடிவந்து கொண்டாட்டத்தில் கலந்துகொண்டான். இளையாள் தலையைக் காட்டவே இல்லை!

மரப்பாச்சிக்குக் காய்ச்சல்

★

'சூடாமணி'

மரப் பாச்சிக்குக் காய்ச்சலடி!
மாள வில்லே வேலேத்தொல்லே!
பசுவும் வாசலில் காத்திருக்குது
பாலும் கறக்க நேரம் இல்லே.
கண்கள் ரெண்டும் சிவந்துபோச்சு
கால்கள் ரெண்டும் குளிர்ந்துபோச்சு.
உண்ணச் சோறும் ஆக்கவில்லே!
ஒன்றும் தோண வில்லேயடி!
காஞ்சு எரியுது நெருப்புப்போலே!
காய்ச்சல் அடிக்குது பிள்ளேமேலே!
சாஞ்ச தலேயும் நிமிரவில்லே
தரையில் சாஞ்ச பனேபோலே.

பத்தியம் ஒன்றும் தெரியவில்லை!
பாலு கஞ்சி இறங்கவில்லை!
வைத்திய னுந்தான் கிட்டவில்லை!
வாய்க்கு ருசியும் தெரியவில்லை!

இடிச்ச இஞ்சிச் சாறெடுத்து
இரண்டு மாத்திரை இழைச்சுவச்சேன்
கொஞ்சம் குடிச்சுடு கண் இல்லையோ!
கொண்டுவா சர்க்கரை! ஆ! ஊ! ஆ! ஊ!

நெஞ்சைத் தடவித் தடவிவிட்டு
நெட்டி ஒடிச்சு எடுத்துவச்சேன்.
கொஞ்சம் தலையைத் தூக்கிவச்சேன்
குழந்தை உடம்பும் சரியாச்சு.

நாங்கள்ளாம் லீவுலே மாபாலிபுரம் போனேம். அங்கே பெரிய பொம்மை சிர்ப மெல்லாம் பாத்துட்டு சாப்பிட்டோம். அம்மா புளியஞ் சாதம் போட்டாள். நாய்க்குப் போட்டேன். அப்புறம் சவுக்கை தோப்புக்கு போய் இளநீர் சாப்பிட்டேன். காசு கொடுத்தேன். சமுத்திரத்திலே பெரிய அலே வந்து எம்மேலே ஜலத்தை அடிச்சிது. எங்கப்பாவை புடிச்சிண்டேன். மண்டபம் போனேன். பழைய லைட்டவுஸ் மலே மேல் ஏறி போய் பாத்துட்டு பாஞ்ச ரதம் போனேம். வர போது பஸ்ஸிலே வந்தோம். ரொம்ப வேடிக்கையாய் இருந்தது. கடைசிலே தூங்கியே போயிட்டேன். அம்மா ஊரு வந்துட்டப்புறம் எழுப்பினு.

—ஆர். எஸ். குமார், (11 வயது) சென்னே - 17

ஃ ஃ ஃ

நான் நினைக்கிறேன்—சமுத்திரத்து ஜலம் உப்பா யில்லாமே சர்க்கரை போல தித்திப்பாய் இருந்தால் என்ன!

—எஸ். கே. கோவிந்தன், (9 வயது) அடையாறு.

ஃ ஃ ஃ

மானத்துலே இருக்கற நக்ஷத்திரம் ஒண்ணு ஒண்ணு அவுட்டு மத்தாப்புப் போல வாண வேடிக்கை செய்துண்டே இருக்கப்படாதா?

ஸரஸ்வதி—(10 வயது) நியூ டில்லி.

ஃ ஃ ஃ

கண்ணன் பிரதியைக் காரைக்குடியில் வாங்கி வாசித்தேன். மிகவும் ரஸித்தேன். என் குழந்தைகளுக்கு உகந்த பத்திரிகை. என் குழந்தைகளின் விருப்பப்படி அங்கத்தினர் பதிவு கூபன் ஒன்றும் அனுப்பியிருக்கிறேன். அவர்களைக் கண்ணன் கழகத்தில் சேர்த்து நலனடையச் செய்வீர்களென விரும்புகிறேன்.

—டி. நாராயணன், உபாத்தியாயர், போர்டு ஹைஸ்கூல், திருப்பத்தூர் (ராமநாதபுரம்.)

ஃ ஃ ஃ

'கண்ணன்' ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

நான் ரெயில் பரிசுக் கதைக்கு எழுதி இருந்தேன். பரிசு கிடைக்கவில்லை என்ற வருத்தம். மற்ற பக்கத்தில் நம் சகோதரர் வாங்கிவிட்டார் என்ற ஆனந்தம்.

—டி. எஸ். புருஷோத்தமன் (B. 12) கும்பகோணம்.

தக்காளிப் பழ அல்வா

தக்காளிப் பழத்தைக் கல்லுரலில் போட்டு நன்ருக அரைத்துத் தோலே எடுத்துவிட வேண்டும். பிறகு அரைத்து வைத்திருக்கும் பழத்துடன் சர்க்கரை சேர்த்து அடுப்பில் வைத்துக் கிளறவும். அதிகக் கெட்டி இல்லாமலே இறக்கிவிட வேண்டும். இறக்கும் சமயத்தில் நெய் ஊற்ற வேண்டும். வேண்டியவைகள்: இரண்டு ராத்தல் தக்காளிப் பழம்; ஒரு ராத்தல் சர்க்கரை; ஏலப்பொடி. தங்கைகளே, இதை நீங்கள் செய்ததும் முதலில் சாப்பிட்டுப் பாருங்கள். நன்ருய் இருந்தால் பிறருக்கும் கொடுங்கள்.

S. சுமதி, (S. 3?) புதுச்சேரி.

ஃ ஃ ஃ ஃ

'கண்ணன்' ஆசிரியர் அவர்களுக்கு, அநேக நமஸ்காரம்!

நீங்கள் அனுப்பிய கடிதமும் ரெயில் பரிசும் கிடைத்தன. அதனுல் எனக்கு உண்டான சந்தோஷத்தை என்னென்று சொல்வது! அதில் என் போட்டோவை அனுப்பும்படி சொல்லியிருந்தீர்கள். நான் எனது போட்டோவை அனுப்பியிருக்கிறேன்.

என் கதை 'மன்னனின் பரிசு' மார்ச்சு மாதக் 'கண்ணனி'ல் வெளியாகியிருந்தது! எங்கள் வீட்டிலுள்ள எல்லோரும் சந்தோஷப் பட்டார்கள்.

ரெயில் பரிசு கிடைத்ததும் தலேகால் தெரியாமல் நான் கூத்தாடினேன் என்ருல், அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லே! பி. எஸ். அப்துல் (13 வயது) மார்ச்சு மாத இதழில் பாட்டு எழுதியிருந்தானல்லவா? நானும் அப்படிக் 'கண்ணன் தபாலி'ல் எழுது

ரெயில் பரிசு கிடைத்துவிட்டது

ரெயில் ஓடுகிறது

கிறேன். எனக்குக் 'கண்ணன்' மீது அளவற்ற ஆசை ஏற்பட்டு விட்டது! ஏதனுல் என்று எனக்கே தெரியவில்லை!

உங்களுடைய அன்பும் ஆதரவும் எனக்கு எப்போதும் தேவை!

இங்ஙனம்,

சி. பாலசுப்ரமண்யம், (B. 12) தொண்டைமான்நல்லூர்.

ஃ ஃ ஃ ஃ

விநோத நாள் குறிப்பு

1950-ஆம் வருடத்தில் உள்ள ஏதாவது ஒரு மாதத்தின் குறிப்பிட்ட ஒரு தேதி என்ன கிழமை என்று கண்டுபிடிக்க:—

எந்த மாதத்தில் எந்தத் தேதி என்ன கிழமை என்று கண்டு பிடிக்க வேண்டுமோ, அந்தத் தேதியுடன் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அந்த அந்த மாதத்திற்கு உள்ள எண்ணைக் கூட்டி, 7-ஆல் வகுக்க வேண்டும். ஒன்று மீதம் வந்தால் ஞாயிறு என்றும், 2,3,4,5,6, மீதம் வந்தால் முறையே, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி என்றும், மீதம் வராவிடில் சனி என்றும் ஆகும்.

ஜனவரி	—0	ஜூலை	—6
பிப்ரவரி	—6	ஆகஸ்ட்	—2
மார்ச்	—3	செப்டம்பர்	—5
ஏப்ரல்	—6	அக்டோபர்	—7
மே	—1	நவம்பர்	—10
ஜூன்	—4	டிசம்பர்	—5

(உ-ம்) ஜூன் $15 = 15 \times 4 = \frac{19}{7} = 2$—மீதி 5

மீதி 5 வந்திருப்பதால் வியாழக்கிழமை.

—மா. விவேகானந்தம், (V-17) பாளையங்கோட்டை.

தமிழ்த் தாத்தா

கி. வா. ஜகந்நாதன்

யார் வீட்டிலாவது பழைய நகையோ, பாத்திரமோ இருந்தால் அதை லேசில் அழிக்க மனசு வராது.

“எங்கள் தாத்தாவுக்குத் தாத்தா காலம் முதல் இது எங்கள் வீட்டில் இருக்கிறது. ஆகிவந்தது” என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வார்கள். இப்படியே, “இந்த நிலம் நூறு வருஷத்துக்கு மேலாக எங்கள் குடும்பத்தில் இருக்கிறது” என்று சொல்லுவார்கள். நூறு வருஷம் கிடக்கட்டும்; இருநூறு வருஷம், முந்நூறு வருஷம், நானூறு வருஷமாக இருந்து வரும் அருமையான சொத்து நமக்குக் கிடைத்



டாக்டர் உ. வே. சாமிநாதையர்

அ/1176

தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்! இதெல்லாம் நூற்றுக் கணக்கு. இரண்டாயிரம் வருஷ காலமாக இருந்த சொத்து மறைந்து போய்த் திடீரென்று கிடைக்கிறது. அப்போது நாம் எப்படித் துள்ளிக் குதிப்போம்!

தமிழ்த் தாத்தா மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அப்படித்தான் துள்ளிக் குதித்தார். தமிழ் நாட்டையே சந்தோஷமாகத் துள்ளிக் குதிக்கச் செய்தார். இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் இருந்த வித்துவான்கள் எத்தனையோ பாடல்களைப் பாடினார்கள். அவற்றையெல்லாம் சேர்த்துப் புத்தகமாக்கி வைத்தார்கள். பழைய காலத்தில் அச்சுப் புத்தகம் இல்லை. பனையோலையில் எழுதிச் சுவடியாகச் சேர்த்து வைப்பார்கள். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் தமிழ் நாட்டில் தமிழ்ச் சங்கம் ஒன்று இருந்தது. அதில் பல புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் பாடிய பாடல்களெல்லாம் ஏட்டுச்சுவடிகளில் இருந்தன.

அந்தச் சுவடிகளைப் பாதுகாப்பவர் இல்லாமல், எங்கோ மூலையில் கிடந்தன. அந்தப் பாடல்களைப் படிக்கிறவர்களும் இல்லை. அதனால் அந்தக் கவிகளினால் தெளிவாகும் செய்திகள் தெரியாமல் போயின. இருக்கும் இடம் தெரியாமல் அந்தத் தமிழ் நூல்கள் மறைந்திருந்தன. அந்தப் பாடல்களைத் தமிழ்த் தாத்தா கண்டு பிடித்தார். புதையல் எடுப்பதுபோல எடுத்து, சுத்தமாக்கி அச்சிட்டுத் தந்தார். அந்தப் புத்தகங்களைப் படித்துப் பார்த்தபோது எத்தனை புதிய விஷயங்கள் தெரிந்தன! புதிய விஷயங்கள் என்று சொல்லக் கூடாது; பழைய விஷயங்களே. பல காலமாகத் தெரியாமல் மறைந்திருந்ததனால், அவ்வளவும் புதுமையாக இருந்தன.

தமிழ் நாட்டில் அந்தக் காலத்தில் ஆண்டிருந்த அரசர்களைப்பற்றி அந்த நூல்கள் பல கதைகளைச் சொல்லுகின்றன. பல புலவர்களைப்பற்றித் தெரிந்துகொள்கிறோம். ஜனங்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று அறிகிறோம். பழைய ஊர்கள், பழைய சபைகள், பழைய நாகரிகம் இன்னும் எத்தனை எத்தனையோ விஷயங்களை நாம் தெரிந்துகொள்கிறோம்.

1855-ஆம் வருஷம் பிறந்து 88 வருஷகாலம் தமிழ்த் தாத்தா வாழ்ந்தார். பெரிய கவிஞராகிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டார். அவரும் மகா வித்துவான் ஆனார். கும்பகோணம் காலேஜிலும் சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜிலும் தமிழ் ஆசிரியராக இருந்தார். எத்தனையோ பேர்களுக்கு வீட்டி

லும் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

அவர் முதல் முதலில் சீவக சிந்தாமணி என்ற புத்தகத்தை அச்சிட்டார். பத்துப் பாட்டு, புறநானூறு முதலிய அருமையான நூல்களை அவர் பதிப்பித்திருக்கிறார். அவருக்கு இங்கிலீஷ் தெரியாது. ஆனாலும் மேல்நாட்டில் பல பெரிய ஆராய்ச்சிக்காரர்களெல்லாம் அவர் செய்த ஆராய்ச்சியைப் பாராட்டினார்கள். நூறு புத்தகங்களுக்குமேல் வெளியிட்டிருக்கிறார்.

அவர் பல கதைகளையும் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். இவ்வளவு படித்த அவர் உங்களுக்குக்கூடப் புரியும்படி தெளிவான நடையில் எழுதியிருக்கிறார். நடந்த விஷயங்களைக் கதை போலச் சொல்வதில் அவர் மிகவும் கெட்டிக்காரர். பண்டிதர்களுக்கெல்லாம் பெரிய பண்டிதர்; ஆனாலும் குழந்தைகளுக்கும் விளங்கும்படி பேசுவார்; எழுதுவார்.

அவர் தம்முடைய சரித்திரத்தை விரிவாக எழுதியிருக்கிறார். முழுதும் எழுதி முடிக்கவில்லை. அதற்குள் அவர் வாழ்வு முடிந்துவிட்டது.

* * *

தமிழ்த் தாத்தாவுக்கு ஒரு தாத்தா இருந்தார். அவர்களுடைய ஊர் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள உத்தமதானபுரம். தமிழ்த் தாத்தாவுக்குப் பிற்காலத்தில் எத்தனையோ பட்டங்கள் கிடைத்தன. திருவாவடுதுறை என்ற ஊரில் உள்ள சைவ மடத்தின் தலைவர் மகாவித்துவான் என்று ஒரு பட்டம் அளித்திருக்கிறார். அரசாங்கத்தார் மகாமகோபாத்தியாயர் என்ற பட்டம் அளித்தார்கள். சென்னை யூனிவர்ஸிடியில் டாக்டர் என்ற பட்டம் கிடைத்தது. இன்னும் திராவிட வித்தியா பூஷணம், தாக்ஷிணாத்திய கலாநிதி என்றெல்லாம் வேறு பட்டங்களும் கிடைத்தன.

இவைகளெல்லாம் இருக்கட்டும். மற்றொரு பட்டம் அவருக்குக் கிடைத்தது. அந்தப் பட்டம் என்ன தெரியுமா? "கத்திரிக்காய்த் தோகையல்!" அவருக்கு ஒரு தாத்தா இருந்தார் என்றேனே, அந்தத் தாத்தாவால் வந்த பட்டம் அது.

ஆறு வயசுக் குழந்தையாக இருந்தார் சாமிநாதையர். அவர் தகப்பனார் வெளியூருக்குச் சென்றிருந்தார். வீட்டில் அவருடைய தாயார் இருந்தார். அவர் தாத்தாவாகிய கிழவருக்குச் சாப்பாட்டில் அதிகப் பிரியம். "ஒருவரும் நான் சொல்கிறபடி நடக்கிறதில்லை" என்று சொல்லிக் கொண்டே இருப்பார். அவருக்குப் பிரியமான சமையலைச் செய்ய வேண்டுமென்று சாமிநாதையருடைய தாயார் எண்ணுவார். தம்

குமாரரைக் கூப்பிட்டு, "உன் தாத்தாவிடம் போய் என்ன சமையல் பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வா" என்று சொல்லி அனுப்புவார். குழந்தை சாமிநாதையர் தாத்தாவிடம் போவார். "என்ன சமையல் செய்ய வேண்டும்?" என்று கேட்பார்.

தாத்தா உடனே பதில் சொல்ல மாட்டார். கனைத்துக் கொள்வார். மேலும் கீழும் பார்ப்பார். "சமையலா?" என்பார். சிறிது நேரம் கழித்து, "மண்ணுங்கட்டி, தெருப் புழுதி" என்று வெறுப்பாகச் சொல்வார்.

அதைக் கேட்ட பேரர் உடனே அம்மாவிடம் ஓடுவார். "மண்ணுங்கட்டி, தெருப் புழுதி" என்று சொல்வார்.

"என்னடா இது? சமையல் என்ன செய்கிறதென்று கேட்டால், எதையோ உளறுகிறாயே!" என்று தாயார் கேட்பார். "தாத்தா அப்படித் தான் சொன்னார்" என்பார் குழந்தை. "சரி, சரி, மறுபடியும் போய்க் கேட்டுவிட்டு வா" என்று அனுப்புவார்.

பேரர் தாத்தாவிடம் மறுபடியும் போவார். "என்ன செய்யவேண்டும்?" என்று கேட்பார். அவர் நிதானமாக, "கத்திரிக்காய் இருக்கிறதா?" என்று கேட்பார்.

மறுபடியும் சாமிநாதையர் அம்மாவிடம் போவார். "கத்திரிக்காய் இருக்கிறதா?" என்று கேள்வியை ஒப்பிப்பார். "இருக்கிறது" என்று தாயார் சொல்வார். அங்கிருந்து தாத்தாவிடம் வந்து, "இருக்கிறது" என்பார்.

"சரி. அந்தக் கத்திரிக் காயைச் சுட்டுவிட்டு...என்ன தெரிகிறதா?" என்று தாத்தா ஆரம்பிப்பார்.

"ஹூம்" என்று கேட்பார் பேரர்.

"அதைச் சுட்டுவிட்டு அம்மியில் வைத்து...என்ன கேட்கிறதா?"

"ஹூம்!"

"கத்திரிக்காயை அம்மியில் வைத்து ஓட்டி ஓட்டி ஓட்டி ஓட்டி......"

ஓட்டி ஓட்டி அரைப்பதை அவர் ஓட்டிக் கொண்டே போவார்.

அதை அப்படியே அம்மாவிடம் போய்ச் சொல்வார் குழந்தை. மறுபடியும் தாத்தா கூப்பிடுவார். கத்திரிக்காய்த் துவையலை எப்படிச் செய்யவேண்டும் என்பதைச் சாங்கோபாங்கமாகச் சொல்வார். இந்த மாதிரி கத்திரிக் காய்த் துவையல் விஷயத்தைத் தாத்தாவிடம் கேட்டு அம்மாவுக்குச் சொல்வதால் எல்லாரும் அவரை, "கத்திரிக்காய்த் தோகையல்" என்று அழைக்க ஆரம்பித்தார்கள்.

* *

தமிழத தாத்தாவின தகப்பனர் சங்கீத வித்துவான். அத

ஞல் சாமிநாதையரும் சங்கீதம் கற்றுக்கொண்டார். சின்ன வயசிலேயே கவி பாடுவார். அங்கங்கே உள்ள தமிழ்ப் புலவர்களிடம் அவர் தமிழ் படித்தார். அந்தப் புலவர்களில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு நூல் தெரியும். அவரவர்களுக்குத் தெரிந்தவற்றைக் கற்றுக்கொண்டார். கடைசியில் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை என்னும் பெரிய கவிஞரிடம் பாடம் கேட்க ஆரம்பித்தார்.

முதலில் அந்தக் கவிஞர் சாமிநாதையருக்கு நேரே பாடம் சொல்லவில்லை. அவரிடம் படித்து வந்த மாணுக்கர் ஒருவர் பாடம் சொன்ஞர். சாமிநாதையருக்கோ நேரே பிள்ளையவர்களிடம் பாடம் கேட்கவேண்டுமென்ற ஆசை. புதிதாக வந்த அவர் எப்படித் தம் ஆசையைத் தெரிவிப்பது? ஒரு வழியும் தெரியவில்லை. மனசுக்குள்ளே அந்த ஆசையை வைத்துப் புழுங்கிக்கொண்டிருந்தார்.

மாயூரத்தில் மீனுட்சிசுந்தரம் பிள்ளை தம்முடைய வீட்டின் பின்புறத்தில் ஒரு தோட்டத்தை அமைத்தார். பெரிய மரங்களை மண்ணோடு பறித்துக்கொண்டு வந்து வைக்கச் செய்தார். அழகான மலரையும் பசுமையான மரங்களையும் பார்ப்பதில் அவருக்கு விருப்பம் அதிகம்.

வைத்திருந்த மரங்களெல்லாம் தளிர்த்துப் பூத்துச் சோலையாக விளங்கவேண்டும் என்ற ஆசை மீனுட்சிசுந்தரம் பிள்ளைக்கு இருந்தது. மரங்களில் புதிய தளிர் வந்திருக்கிறதா என்று பார்ப்பார். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் வீட்டுக்குப் பின்புறம் சென்று மரங்களைக் கவனமாக ஆராய்வார். எங்காவது ஒரு மரத்தில் புதிய தளிர் தளித்திருந்தால் அவர் மனசிலும் தளிர் விடும். இப்படித் தினந்தோறும் அவர் பார்த்து வருவதைச் சாமிநாதையர் கவனித்தார். மறுநாள் சீக்கிரமே எழுந்தார். நேரே வீட்டின் பின்புறம் சென்று எந்த எந்த மரங்களில் புதிய தளிர்கள் தோன்றி யிருக்கின்றன என்று பார்த்துத் தெரிந்துகொண்டு போனுர். சிறிது நேரம் கழித்துக் கவிஞர் அங்கே வந்தார். தளிர்களைப் பார்க்கத் தொடங்கினுர். பார்த்துக் கொண்டிருக்கையில் சாமிநாதையர் அங்கே வந்தார். தம்முடைய ஆசிரியரை மிகவும் மரியாதையோடு அணுகினுர். தாமும் தளிரைப் பார்ப்பது போலப் பார்த்து, "அதோ, அங்கே ஒரு தளிர்" என்ருர். ஆசிரியர் ஆவலோடு, "எங்கே?" என்று சொல்லி அதைப் பார்த்தார். மறுபடியும், "இதோ இங்கே ஒன்று" என்ருர். அதையும் ஆசிரியர் பார்த்து மகிழ்ந்தார்.

இந்தக் காரியத்தால், சாமிநாதையருக்கு ஆசிரியரோடு நேரில் பேசிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. புதிய தளிர்களைக் காணக் காண மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் மனசு மிகவும் சந்தோஷம் அடைந்தது. அவற்றைப் பார்த்துச் சொன்ன சாமிநாதையரிடத்திலும் அன்பு உண்டாயிற்று. அத்தகைய சமயத்தில் சாமிநாதையர், "நேரிலே பாடம் கேட்க வேண்டும் என்ற ஆவல் இருக்கிறது" என்று ஆசிரியரிடம் விண்ணப்பித்துக் கொண்டார். மீனாட்சிசுந்தரம் பிள்ளை அப்படியே பாடம் சொல்லத் தொடங்கினார்.

* * *

மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குக் கவி பாடுவதென்றால் தண்ணீர் பட்ட பாடு. அன்பர்களுடன் பேசிக்கொண்டே கவிகளையும் சொல்வார். சொல்லச் சொல்லச் சாமிநாதையர் ஏட்டில் எழுதிக்கொள்வார். இப்படிப் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை பல மாணாக்கர்களுக்குப் பாடம் சொன்னார். அந்தக் காலத்தில் இருந்த எல்லா நூல்களையும் நன்றாகப் பாடம் சொல்லுவார். ஆனால் அவருக்குக்கூடத் தெரியாத புத்தகங்களை நாம் இப்போது படிக்கிறோம். அதற்குச் சாமிநாதையரே காரணம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த புலவர்கள் பாடிய நூல்கள் அந்தக் காலத்தில் எங்கோ கிடந்தன. கும்பகோணம் காலேஜில் ஆசிரியராக இருந்தபோது சாமிநாதையர் அந்த நூல்களை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். ஊர் ஊராகச் சென்று ஏட்டுச்சுவடிகளைத் தேடினார். ஏட்டுச்சுவடிகளில் உள்ளதைப் படிப்பது மிகவும் கஷ்டம். அதில் எழுதினவர்கள் செய்த தப்புக்களெல்லாம் இருக்கும். நூல்களோ மிகப் பழங்காலத்து நூல்கள். இப்படி இருந்தும் ஏட்டுச்சுவடிகளைப் படித்து, பழைய பாடல்களின் அர்த்தத்தைத் தெரிந்துகொண்டார் தமிழ்த் தாத்தா. அழகாக அச்சிட்டார்.

தமிழ் படித்துக் கரையேற வேண்டுமானால் அவர் பதிப்பித்த நூல்களைப் படிக்காமல் இருக்க முடியாது. தமிழ் நாட்டின் பழைய சரித்திரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானாலும் அவர் அளித்த நூல்களைப் படிக்க வேண்டும்.

நீங்கள் இன்னும் சில வருஷங்கள் ஆனபிறகு அவர் வெளியிட்ட நூல்களைப் படிக்கத்தான் போகிறீர்கள். அப்போது அவருடைய பெருமை உங்களுக்கு நன்றாகத் தெரிய வரும்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(D) 7. திரவியம், ப., சின்னமனூர். 8. தேவதாஸ், T. L., ஜனார்த்தனன் T. L., துகாராம், T. L., மதுரை. 9. துரைசாமி, G. B., உடுமலைப் பேட்டை. (G) 4. கோவிந்தராஜுலு, A., குசப்பேட்டை, வேலூர். 5. ஞானப்பிரகாசம், G., தேனி. 6. ஜியார்ஜ், M., கோவை. 7. குருநாதன், S., மாம்படுகை. 8. மடம் குருசாமி, K., வந்தவாசி. 9. கோவிந்தசாமி, M., திருக்கழுக்குன்றம். 10. கணேசன், A., அமிஞ்சிக்கரை. 11. கணபதி சுப்பிரமணியம், M. S., திருவல்லிக்கேணி. 12. கணேஷ், A., புது டில்லி. 13. கணேசன், A., ஆம்பூர்ப் பேட்டை. (H) 5. ஹரிராகவன், G., ராசிங்கபுரம். 6. ஹேமலதா, அ., அல்சூர். (J) 4. ஜகதீசுவரன், P., சாவகச்சேரி. 5. ஜகதீசன், M., துறையூர். 6. ஜயலக்ஷ்மி, S., மயிலாப்பூர். 7. ஜானகிராமன், A., R. S. புரம். 8. ஜயாபாய், V., ஹாஸ்பேட். 9. ஜயாராஜ், S. J., பாளையங்கோட்டை. 10. ஜகந்நாதன், D., சென்னை 21. (K) 21. குளத்தூரான், நா., கொழும்பு. 22. கண்ணுச்சாமி, M., திருப்பத்தூர் (Rd). 23. குமாரசாமி, S., பொன்னுமலை. 24. கந்தசாமி, K. V., சூலூர். 25. கிருஷ்ணன், K. S., திருவல்லிக்கேணி. 26. கருணாகரன் K., மதுரை. 27. கண்ணன், K., மதுரை. 28. கமலாம்பாள், S., ஐயம்பேட்டை. 29. கிருஷ்ணமூர்த்தி, ஸ. ப., சென்னை, 17. 30. கண்ணன், N., பவானிசாகரம். 31. கண்ணன், K., மேல்பேட்டைசாரம். 32. கிருஷ்ணன், P., வெள்ளக்கோயில். (L) 10. லக்ஷ்மிநாராயணன், இரா., கூடலூர், O. T. 11. லக்ஷ்மிநாராயணன், V., நரசிங்கம்பேட்டை. 12. லக்ஷ்மணன், A., குடியாத்தம். 13. லிங்கன், வீ. ர., தேவகோட்டை. 14. லக்ஷ்மிகாந்தன், V., மேகநாதன் V., பரஞ்சோதி V., வாணியம்பாடி. (M) 13. முத்துகிருஷ்ணன், M., நாமக்கல். 14. முத்துலக்ஷ்மி, L. D., நுங்கம்பாக்கம். 15. முத்துபாய், குருநாத நாய்க்கனூர். 16. முரளி P. S., ராஜகோபாலபுரம். 17. மாதேவன் பிள்ளை, தி., திருவனந்தபுரம். 18. மெய்யப்பன், M., உடுமலைப்பேட்டை. (N) 12. நாகராஜன், N., குகை, சேலம். 13. நாராயணன், P., ஆலப்புழை. 14. நரசிம்மன், K., மயிலாப்பூர். 15. நடராஜன், S., மயிலாப்பூர். 16. நாராயணன், A. R., சேலம். 17. நிர்மலா, V., தியாகி, வி.,

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..............................

(தேதி, மாதம், வருஷம்)

ஏப்ரல் '50

சாந்தா, மயிலாப்பூர். 18. நாராயணசாமி, C. N., சென்னை, 23. 19. நம்பி, S., ஸ்ரீரங்கம். 20. நாராயணசாமி, R., கொழும்பு. 21. நைனா முகம்மது, H., (ஊர் எழுதவில்லை.) (P) 13. பத்மா, விட்டலபுரம். 14. பரமேசுவரன், A., புரசைவாக்கம். 15. பால், D., குலவாணிகர்புரம். 16. பத்மநாப ராவ், K., மயிலாப்பூர். 17. பட்டாபிராகவன், V., போரங்கி. 18. பார்த்தசாரதி, T., குண்டக்கல். 19. பிரமநாயகம், கி., திருநெல்வேலி. 20. பிச்சைமுத்து, S., ஆலங்கோட்டை. 21. புஷ்பா, T.L., சேலம். 22. பெருமாள், K., சூலூர். 23. பழனியப்பன், M., காரைக்குடி. 24. பிரகாசம், S., மயிலாப்பூர். 25. பொன்னம்பலம், வி., காரைநகர். (R) 26. ராமஸ்வாமி, P.S., சிவகாசி. 27. ராமகிருஷ்ணன், S.V., வாணியம்பாடி. 28. ரமணி ஹரிஹரன், ஆரணி. 29. ராஜாராம், T. K., மயிலாப்பூர். 30. ராமலிங்கம், வெ., மாம்படுகை. 31. ரங்கராஜி, த.,நெல்லித்தோப்பு. 32. ரங்கராஜன், V., ராயப்பேட்டை. 33. ராமசாமி, S., கோயம்புத்தூர். 34. ராமதுரை, S., குன்னத்தூர். 35. ராமசந்திரன்,R., வாணியம்பாடி. 36. ரங்கநாதன், K. S., மன்னார்குடி. 37. ராஜரத்னம், T. S., கோழிக்கோடு. 38. ராமமூர்த்தி, A. S., மயிலாப்பூர். 39. ரத்தினசாமி, K. R., கோபிசெட்டிபாளையம். 40. ராமகிருஷ்ணன், B. S., சுப்பிரமணியன், B.S., மயிலாப்பூர். 41. ராமதாஸ், T., கொல்லம். 42. ராகவேந்திரன், A., மேட்டுப்பாளையம். 43. ராமஸ்வாமி, P., தூத்துக்குடி. 44. ராஜாமணி, T. S., தெப்பக்குளம். 45. ராஜன், R., திருமங்கலம். 46. ராமசந்திரன், K., ஹைதராபாத். 47. ராமு, V. G., வண்டலூர். 48. ராஜு, V. S., மயிலாப்பூர். 49. ரங்கநாதன், N., மயிலாப்பூர். 50. ராஜகோபால், சி. ஆர்., ஆர். எஸ். புரம்; 51. ராஜகுமார், K., மயிலாப்பூர். 52. ரங்கநாதன், A. S., சென்னை - 1. 53. ராதாகிருஷ்ணன், C., வெங்கட்டரமணன், C., மயிலாப்பூர். 54. ராஜா S.R., திருவள்ளூர். 55. ராமலிங்கம், S., திருநெல்வேலி. 56. ராஜு, K., புஷ்பா, K., ஆம்பூர். 57. ராதை, K. R., பாலக்காடு. 58. ராமலிங்கம், E., பேட்டை. 59. ராதா, R., புது டில்லி. (S) 42. சுப்பையா, வை., நன்னிலம். 43. சன்மதி, C., திருவண்ணாமலை. 44. சுமதி, ப., சிங்கப்பூர். 45. ஸ்ரீநிவாஸன், G., தஞ்சாவூர்; 46. சகுந்தலா, S. மயிலாப்பூர். 47. சிவகாமி, சி., அச்சுவேலி. 48. சிவமதி, A. S., புதுச்சேரி.

(மீதி அடுத்த இதழில் வரும்.)

கண்ணன்

மாதந்தோறும்

இங்கிலீஷ் 1-ஆம் தேதி

வெளிவரும்

கோலி விளையாட்டு

'சுண்டு'

மண்தரையில் ஓர் அடி விட்டமுள்ள வட்டம் அமைத்து ஆளுக்கு ஒரு கோலிவீதம் ஏழெட்டுக் கோலிகளை வட்டத்தின் நடுவில் வைக்க வேண்டும்.

முதலில் விளையாடும் பையன் வட்டத்துக்கு வெளியே நிற்க வேண்டும். ஒரு கோலியைச் சுட்டு விரலுக்கும் கட்டை விரலுக்கும் நடுவில் பிடித்துக் கொண்டு அப்படியே கண்ணுக்கு அருகில் கொண்டுவர வேண்டும். பிறகு குறி பார்த்து அதை வட்டத்திலுள்ள கோலிகளின் நடுவே போட வேண்டும்.

அப்போது வட்டத்துக்கு வெளியில் சிதறிப்போகும் கோலிகள் அவனைச் சேர்ந்தவை. அப்படி ஒன்றுகூட வெளியே சிதறுவிட்டால் கையிலிருந்த கோலியும் போனமாதிரிதான். வட்டத்துக்குள் இருக்கும் கோலிகளோடு அதையும் வைத்துவிடவேண்டும்.

வட்டத்திலுள்ள எல்லாக் கோலிகளையும் இப்படி யாராவது வெளியே சிதற அடித்ததும் ஆட்டத்தைக் கலைத்துவிட்டுப் புதிதாகத் தொடங்கலாம்.



* * *

சுவருக்கு ஓர் அடி தூரத்தில் ஒரு சிறிய குழி தோண்டவேண்டும். ஒவ்வொருவரும் எட்டடித் தூரத்திலிருந்து அந்தக் குழியை நோக்கிக் கோலியை உருட்ட வேண்டும். எவனுடைய கோலி, குழிக்குச் சமீபத்தில் இருக்கிறதோ அவன் முதலில் ஆடவேண்டும். இப்படியே வரிசைக் கிரமமாக ஆடவேண்டும். பிறகு எல்லாரும் சேர்ந்து தலைக்கு இரண்டு மூன்று கோலிகளை முதல் பையனிடம் கொடுக்க வேண்டும். அவன் அவைகளை வாங்கி, குழியை நோக்கி உருட்ட வேண்டும். குழியில் விழும் கோலிகள்தான் கணக்கு. கோலிகள் ஒன்றின்மேல் ஒன்று படாமல் நேராகப் போய்க் குழியில் விழ வேண்டும்.

வரிசைக் கிரமமாக ஒவ்வொருவரும் மீதி கோலிகளை வைத்துக் கொண்டு ஆட வேண்டும். குழியில் அதிகம் உருட்டுகிறவன் தான் ஜயித்தவன்!



தோட்டத்தில் ஜிலுஜிலு என்று காற்று வீசிக் கொண்டிருந்தது. சுகமான மஞ்சள் வெயில் காய்ந்தது. கம்மென்று மாம்பழ வாசனை வீசியது. அது ஒரு மாந்தோட்டம்.

ரஞ்சனும் மதுரமும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தார்கள். உல்லாசமாகக் கதை சொன்னுள் மதுரம். ரஞ்சன் கேட்டுக்கொண்டிருந்தான். ரஞ்சன் அத்தான்; மதுரம் அம்மங்காள்.

"பெண்ணு நல்ல பெண்ணுதான்;
பையன் கொஞ்சம் மட்டுத்தான்."

கிளி ★ ★ ★ ★ எழுதியவர் : தி. ஜ. ர.

திடீரென்று இப்படி ஒரு குரல் கேட்டது.

ரஞ்சன் சுற்றுமுற்றும் பார்த்தான். மதுரமும் பார்த்தாள். யாரையும் காணவில்லை.

''மனிதரையே காணோம். பேச்சுக்குரல் கேட்கிறதே. எப்படி?'' என்றான் ரஞ்சன்.

''அதுதானே எனக்கும் தெரியவில்லை'' என்றாள் மதுரம்.

மறுபடியும் கேட்டது அந்தக் குரல்:

''கிழ் ழ் ழ் ழ்!........
பெண்ணு நல்ல பெண்ணுதான்;
பையன் கொஞ்சம் மட்டுத்தான்.''

''ஓஹோ! எனக்குத் தெரிந்துவிட்டது. அதோ மரத்தின் மேலே பார். அந்தக் கிளையில் ஒரு கிளி இருக்கிறது. அதுதான் பேசுகிறது'' என்றாள் மதுரம்.

ரஞ்சனும் அதைப் பார்த்தான். அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

''ஏ கிளியே, என்னை ஏன் உனக்குப் பிடிக்கவில்லை? உனக்கு நான் என்ன கேடு செய்தேன்?'' என்று கேட்டான்.

''அடி! உதை! நொறுக்கு! கிழ்ழ் ழ் ழ்....'' என்றது கிளி.

மதுரம் 'கொல்' என்று சிரித்துவிட்டாள்.

''ஹிஹ் - ஹிஹ் - ஹிஹ்-ஹி!'' என்றது கிளி.

''இந்தக் கிளி என்ன என்னவோ உளறுகிறது. இது ஒரு பித்துக்கொள்ளிபோலே இருக்கு. காரணமே இல்லாமல் பேசுகிறது'' என்றான் ரஞ்சன்.

''அப்படிச் சொல்லாதே, அத்தான். இது ஏதோ பழகிய கிளி; மனிதரோடு பழகியது. பழகாத கிளி பேசுமா? பேசாது. பழகிய கிளி பேசும். வார்த்தைக்கு அர்த்தம் தெரியாது; பேசும். எங்கள் வாத்தியார் சொல்லியிருக்கிறார். இது பேசுவதற்கு ஏதாவது காரணம் இருக்கத்தான் இருக்கும். நமக்குத் தெரியவில்லை'' என்றாள் மதுரம்.

''பெண்ணு நல்ல பெண்ணுதான்;
பையன் கொஞ்சம் மட்டுத்தான்.
அடி! உதை! நொறுக்கு! கிழ்ழ்''

என்று மறுபடியும் 'விஸில்' அடித்தது கிளி.

மதுரம் சொன்னது நிஜந்தான். இது பழகிய கிளி. ஒரு வித்தையாடியின் கிளி. அவர் கிளி ஸர்க்கஸ் நடத்துகிறவர். இதை ஒரு கூண்டில் வைத்திருந்தார். இது தப்பி ஓடி வந்துவிட்டது.

சற்று நேரத்தில் வித்தையாடி இங்கே வந்தார். கையில் ஒரு பழத்தை வைத்துக்கொண்டார். ஒரு விதமாக 'விஸில்' அடித்தார். கிளி பறந்து வந்தது; வித்தையாடியின் தோளில் உட்கார்ந்தது.

''இது இத்தனை நாழிகை எங்களோடு வம்பு பேசியது'' என்றாள் மதுரம்.

''நல்ல வேளை. மனிதரைக் கண்டால் இதற்கு வேடிக்கை; பேசத் தொடங்கிவிடும். பறந்து வந்தது; உங்களைக் கண்டது; இங்கே தங்கிவிட்டது. இல்லாவிட்டால் ஓடியிருக்கும். நான்

இன்னும் தேடிக்கொண் டிருக்க வேண்டும்'' என்ருர் வித்தை யாடி.

அவருக்கு இவர்களிடம் பிரியம் உண்டாயிற்று. "என் ஜாகைக்கு வாருங்கள். நான் பல கிளிகள் வைத்திருக்கிறேன். அவைகள் பல வேடிக்கை செய்யும். உங்களுக்குக் காட்டுகிறேன்'' என்ருர்.

ரஞ்சனும் மதுரமும் அப்படியே போனுர்கள்.

வித்தையாடி பல கூண்டுகளில் பல கிளிகள் வைத்திருந்தார். சின்னச் சின்ன சாமான்கள் வைத்திருந்தார்: ரேக்ளா வண்டி; வளையங்கள்; ஊஞ்சல்; அதிர்வேட்டுக் குழாய். எல்லாம் சின்ன சாமான்கள்.

ஒரு பழுப்புக்கிளி மட்டும் ஓயாமல் என்னவோ உளறிக் கொண்டிருந்தது. "ஷ ஷ போஷ - கிக்கிரி - டிட்டடி - டகு - டக'' என்று கத்தியது. அதன் மூக்கும் நகங்களும் மழுங்கியிருந்தன; சிறகுகள் உதிர்ந்திருந்தன.

"இது என்ன சொல்லுகிறது?'' என்று கேட்டாள் மதுரம்.

'இந்தக் கிழட்டுக் கிளியா? ஏதோ ஆப்பிரிக்க பாஷையை உளறுகிறது.கிளிகளில் மொத்தம் உலகத்திலே ஐந்நூறு வகை உண்டு. இது ஒரு வகை. ஆப்பிரிக்காவில் மாத்திரம் கிடைக்கும் சில கிளிகளுக்குப் பேச்சு வராது; பல கிளிகளுக்கு வரும். இதற்கும் நன்ருகப் பேச வரும். பாவம்! இது கிழடு தட்டிவிட்டது. இதற்கு வயசு அறுபத்தைந்து. கிளிகள் எழுபது, எண்பது வயசு வரைக்குங்கூட வாழும். ஆப்பிரிக்க மலைஜாதியாரிடம் வளர்ந்தது இந்தக் கிளி. சின்ன வயசில் அவர்கள் பாஷையைக் கற்றுக்கொண்டது. இந்தப் பாஷை பேசுகிற ஜாதியாரே இப்போது இல்லை. அவர்கள் எல்லாரும் மறைந்து விட்டார்கள். இது மாத்திரம் அவர்கள் பாஷையை உளறிக்கொண்டிருக்கிறது. கிழமாகிவிட்டது. புதிய பாஷை இதற்கு வரவில்லை. 'இளமையிற்கல்' என்று ஔவையாரே சொல்லியிருக்கிருளே. இளமையில் கற்றது தான் நிற்கும்'' என்ருர் வித்தையாடி.

அவர் ஒரு பீச்சாங்குழலை எடுத்துக்கொண்டார். அதன் வாயில் சல்லடை மாதிரி கண்கள் இருந்தன. அதில் தண்ணீரை எடுத்தார். ஒவ்வொரு கிளியின் மேலும் பீச்சினுர்.கிளிகளெல்லாம் பரபரப்படைந்தன. 'கீ ம் ம்', 'ஷ-ஷ்', 'அக்கா, அக்கா' என்று என்ன என்னவோ கத்தின; சிறகடித்துக் கொண்டன.

"குளிப்பதென்ருல் காக்கைக்கு ரொம்பவும் சந்தோஷம். கிளிகளுக்குப் பிடிக்காதோ?'' என்று கேட்டான் ரஞ்சன்.

"நன்ருய்ப் பிடிக்கும். வெயில் தான் துளிகூடப் பிடிக்காது. லேசான மழை தூறினுல் கிளிகளுக்கு ஆனந்தம். அதில் நின்று குளிக்கும். அதற்காகத்தான் இந்தப் பீச்சாங்குழல் மழை மாதிரி நீரைப் பீச்சுகிறது'' என்ருர் வித்தையாடி.

கொட்டை, பழம் இரண்டுமே கிளிகளுக்கு ரொம்பவும் பிரியம். இவைகளைத் தின்றே அவைகள் வாழ்கின்றன. பூச்சி புழுக்களைத் தின்பதில்லை. நியூஜிலந்தில் மட்டும் ஒருவகைக் கிளி உண்டு. கேயா என்று அதற்குப் பெயர். அந்த வகைக் கிளிகள் பொல்லாதவை. செம்மறி ஆடுகளைக்

கொன்று விடும். அந்த ஆடு களின் முதுகில் உட்காரும். மூக் கால் குடையும்; ரத்தத்தைக் குடித்துவிடும்.

பழகிய கிளிகளுக்குக் கொட்டை, பழம், கொஞ்சம் ரொட்டி, பால்சோறு இவை கொடுக்கலாம். மாமிசம் கொடுக் கவே கூடாது. குடிப்பதற்குச் சுத்தமான தண்ணீரே கொடுக்க வேண்டும். கிளிகள் சாப்பாட் டிலே சிறந்த ரஸிகர்கள்; சுவை யறிந்து உண்ணும்.

வித்தையாடி இந்தக் கிளிக ளுக்கு உணவு கொடுத்தார். பிறகு வித்தை காட்டத் தொடங்கினர்.

முதலில் ஒரு வெள்ளைக்கிளி வந்தது. ரேக்ளாவை அதன் சிறகில் வித்தையாடி செருகிவைத் தார். சிவ் என்று சிறகடித்து வந்தது ஒரு பஞ்சவர்ணக் கிளி. ரேக்ளாவில் உட்கார்ந்தது. வெள் ளைக்கிளி கிர் என்று ரேக்ளாவை இழுத்தது.

"வெள்ளைக்கிளி சீன தேசத் திலும் ஆஸ்திரேலியாவிலும் உண்டு. இது சீனத்துக் கிளி. மூக்கைப் பாருங்கள்; என்ன கறுப்பு! பஞ்சவர்ணக்கிளியின் உடம்பிலே எத்தனை நிறம்! வெள்ளை, நீலம், சிவப்பு, மஞ்சள், பச்சை ஐந்தும் இருக்கின்றன. வால் நல்ல நீளம். வெள்ளைக் கிளிக்குக் காக்கத்துவான் என்று ஒரு பெயர் உண்டு. சில வெள் ளைக்கிளிகளுக்குக் கொண்டை இருக்கும்" என்றார் வித்தையாடி.

அப்புறம் ஒரு குறுக்கு மூக்குக் கிளி வந்தது. அது வளைய வேடிக்கைகள் செய்தது.

"இது ஆசியாவின் சில பாகங் களிலும் ஐரோப்பாவிலும் கிடைப்பது. இதன் முதுகு இந்திர நீல வர்ணம். மூக்கு



மற்றக் கிளிகளைப் போல் இல்லை. குறுக்கே மாறி இருக்கிறது. கவனியுங்கள்" என்று வித்தை யாடி விளக்கினர்.

பிறகு நீலக்கிளி ஒன்று வந்தது. இது தென்னமெரிக்காவில் உள் ளது. முதுகு நீலம்; வயிறு மஞ்சள்.

பச்சைக்கிளி ஒன்றும் வந்தது. இது நம் தேசத்தில் உள் ளது. கோவைப் பழத்தைப் போல் சிவந்த மூக்கு. ஆணுக் குக் கழுத்திலே சிவப்புக்கோடு இருக்கும். இது பெண்கிளி.

நீலக்கிளிக்கும் பச்சைக்கிளிக் கும் கல்யாணமாம். இரண்டும் ஊஞ்சலில் உட்கார்ந்துகொண் டன. தோட்டத்திலே இவர்கள் பார்த்தார்களே, அந்தக் கிளி இப் போது பாட ஆரம்பித்தது.

"பெண்ணு நல்ல பெண்ணுதான்;
பையன் கொஞ்சம் மட்டுத்தான்.
கிழ்ழ்ழ் - டுர்ர்ர்ர்—"

ரஞ்சன், மதுரம் இரண்டுபேருக்கும் சிரிப்பு வந்தது. "இந்தப் பாட்டுத்தானு? கல்யாண ஏசல் பாட்டா? இதைத்தான் தோட்டத்திலே பாடிற்று. நல்ல பாட்டு!" என்று சொன்னுன் ரஞ்சன்.

இந்தச் சமயத்தில் இன்னொரு கிளி வந்தது. ஓர் அதிர் வேட்டைக் கொளுத்தியது.

உடனே, "அடி! உதை! நொறுக்கு! கிழ்ழ் ...." என்றது அந்தப் பேசுங்கிளி.

ரஞ்சனும் மதுரமும் சிரித்துக் கொண்டே விடைபெற்றுர்கள்.

எலுமிச்சம்பழ ரேஸ்

இது ரொம்பத் தமாஷாயிருக்கும். படிக்கும்போது அல்ல; ரேஸ் நடக்கும் போதுதான் தமாஷாய் இருக்கும்.

நீங்கள் எத்தனை பேர் விளையாடப் போகிறீர்கள்? எட்டுப் பேரா? ஏழு பேரா? பத்துப் பேரா? எத்தனை பேராயிருந்தாலும் விளையாடலாம். ஆளுக்கு ஒரு ஸ்பூன் வேண்டும். அவரவர் வீட்டிலிருந்து கொண்டு வந்தால் போகிறது. ஆளுக்கு ஓர் எலுமிச்சம் பழமும் வேண்டும். (எலுமிச்சம்பழம் இல்லாவிட்டால், உருளைக்கிழங்கு வைத்துக் கொள்ளலாம்.)

ரேஸ் புறப்பட ஒரு கோடு கிழித்துக் கொள்ளுங்கள். போய்ச் சேர, முப்பதடி தூரத்தில் மற்றொரு கோடு கிழித்துக் கொள்ளுங்கள்.

புறப்படும் இடத்தில் தவழும் நிலையில் எல்லாரும் மண்டியிட வேண்டும். ஸ்பூனைப் பல்லில் பிடித்துக்கொள்ள வேண்டும். அதில் எலுமிச்சம்பழத்தை வைக்கவேண்டும். ஒரே சமயத்தில் எல்லாரும் புறப்பட வேண்டும். தவழ்ந்தபடி போகவேண்டும், போய்ச் சேரக் குறித்த இடத்தை அடைய வேண்டும்.

வழியிலே எலுமிச்சம்பழம் விழுந்தால் பரவாயில்லை. ஆனால் அதைக் கையால் தொடக்கூடாது. ஸ்பூனைக் கொண்டே எடுக்க வேண்டும். எத்தனை தடவை விழுந்தாலும் தவறில்லை. ஆனால், ஸ்பூனிலே எலுமிச்சம்பழம் இல்லாமல் கடைசிக் கோட்டை அடையக்கூடாது. இதில் யார் முந்துகிறுர்களோ அவர்களுக்கே ஜயம்.

நடுவிலே எலுமிச்சம்பழத்தைக் கோட்டை விட்டு, ஒவ்வொருவரும் ஸ்பூனுல் துழாவும்போது வெகு வேடிக்கையாய் இருக்கும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இது மற்றச் சங்கங்களைப்போல் அல்ல; புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும்.

இதில் உடனே சேரவேண்டுமென்று உங்களுக்கு ஆசையாக இல்லையா? சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். கூபன்களை அந்த அந்த மாதமே பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். ஒரு விஷயம்: இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் முக்கியம். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு குழந்தையும் தனித் தனிக் கூபன் அனுப்பவேண்டியதில்லை. சென்ற இதழில் பேனாப் பரிசுப் போட்டி ஒன்று வெளியிட்டிருக்கிறோம். அதில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம். மற்றவர்கள் அதில் கலந்துகொள்ள முடியாது.

Reg. No. M. 554

For the Whole Family

கலைமகள் காரியாலயத்தில் மூன்று பத்திரிகைகள் மலர்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். ஒவ்வொரு பருவத்துக்குரியது. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பத்திரிகை.

கலைமகள், உபயோகமான கட்டுரைகளையும் உல்லாசமான கதைகளையும் தாங்கி வருகிறது.

மஞ்சரி, இந்தியாவிலுள்ள எல்லாப் பத்திரிகைகளிலிருந்தும் சாரத்தைத் திரட்டிய கதம்பம் (டைஜெஸ்டு).

கண்ணன், நாலு வயசு முதல் பதினாலு வயசுவரையிலுள்ள குழந்தைகளின் கண்ணையும் கருத்தையும் கவர்வது.

இந்த மூன்றையும் சேர்ந்தாற் போல வாங்க விரும்புபவர்கள் "குடும்பச் சந்தாதார்" ஆகலாம். அப்படி ஆகிறவர்களுக்கு லாபம் உண்டு.

உடனே உங்கள் 'குடும்பச் சந்தா'வை அனுப்புங்கள்.

Kalaimagal 6/-
Manjari 4/8
Kannan 3/-
Rs. ~~13/8~~ 12/-
POST FREE

—பூர்த்தி செய்து அனுப்புக—

ஐயா, தயைசெய்து என்னைக் 'குடும்பச் சந்தாதார'ராகப் பதிவு செய்துகொண்டு 3 பத்திரிகைகளையும் அனுப்புங்கள்.

விலாசம்:

____